
# ஸ்ரீரங்கநாதம்



அமரர் பெருமை

திருக்குறள் - அங்கவியல்

சிவசம்புப் புலவர் சரித்திரம்



இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியைச் சேர்ந்தவரும்
சிறந்த சமூக, சமய சேவையாளருமாகிய
அமரர் அப்பாத்துரை ஸ்ரீரங்கநாதன் அவர்களின்

**நினைவு மலர்**


**23.04.2009**

பாசமணம் வீசி நிதம்
பாங்குடனே வளர்த்து வந்தாய்
ஆசைமொழி பேசி எமை
ஆளாக்கி நிமிரவைத்தாய்
ஆண்டவனின் அடிகளிலே
அமைதியுடன் வீற்றிருக்கும்
பாங்கான உமைப்பணிந்து
நாம் இதனைப்
படையல் செய்தோம்

உ

இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியைச் சேர்ந்தவரும்
சிறந்த சமூக, சமய சேவையாளருமாகிய

தோற்றம்
1956
.
05
.
27



மறைவு
2009
.
03
.
24

# அமரர் அப்பாத்துரை ஸ்ரீரங்கநாதன்

## திதி நிர்ணய வெண்பா

செப்புசர்வ தாரியாண்டு சேர்பங் குனியபரத்
தப்பில் திரயோ தசித்திதியாம் – ஒப்பில்லான்
ஆனசிறீ ரங்கநாதன் ஆக்கை தனைவிட்டுப்
போனதிதி யென்றே புகல்.

# அமரர் அப்பாத்துரை ஸ்ரீரங்கநாதன்

## அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு

அமரர் ஸ்ரீரங்கநாதன் அவர்கள் 27.05.1956 அன்று அப்பாத்துரை பூபதியம்மா ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். தனது பாடசாலைக் கல்வியை ஈழத்தின் முக்கிய கல்வி நிலையங்களில் ஒன்றான யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் பெற்றார். தனது சிறு வயதிலேயே தந்தையை இழந்த அவர், குடும்பப் பொறுப்பைச் சுமந்து திறம்படச் செயலாற்றினார். தனது சகோதரிகளான ஸ்ரீபுஸ்பராணி, ஸ்ரீலோகராணி ஆகியோரைக் கல்வி பயிலவைத்து அவர்களை உரிய வயதில் வளமோடு இல்லறவாழ்வில் இணைத்து வைத்தார்.

துவாளி வீதி உடுப்பிட்டியைச் சேர்ந்த நமசிவாயம் தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் மகளான என்னை 18.03.1985 அன்று இல்லறத்துணைவியாகக் கரம்பற்றினார். இல்லறப்பேற்றின் இனியபயனாகச் சுகன்யா, யசோதரன், கமலதர்சன் ஆகியோரை மக்கட்பேறாக பெற்றுக்கொண்டார். தனது பிள்ளைகளின் கல்விக்காகக் கடுமையாக உழைத்தார். அதன் பயனாக அவரது மகள் சுகன்யா கலைப்பிரிவில் மூன்று பாடங்களிலும் விசேட சித்திபெற்று (3A) பேராதனைப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்திற்குத் தெரிவானார். அவர் தற்போது முதலாம் ஆண்டில் கல்விபயின்று வருகிறார். மகன் யசோதரன் நாட்டின் சூழ்நிலை காரணமாகச் சிறுவயதிலேயே கனடா சென்றுவிட்டார். அங்கிருந்து சமூகத்தின் வளர்ச்சிக்காகத் தேவையான உதவிகளையெல்லாம் செய்து வருகிறார். கமலதர்சன் கலைப்பிரிவில் சித்தியெய்தி பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதிபெற்றுள்ளார். இவ்வாறு இல்லறவாழ்க்கையில் மனைவியையும் மக்களையும் பெருமைக்குரியவராக வாழச்செய்தவர், அமரர் ஸ்ரீரங்கநாதன்.

சமூக, சமயப் பணிகளில் தன்னை இணைத்துக்கொண்டு அவற்றின் உயர்விற்காகக் கடுமையாக உழைத்தவர் இவர். மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற தத்துவத்தைத் தனது வாழ்க்கையில் கடைப்பிடித்து வாழ்ந்தவர். எண்ணத்தைச் செயல்வடிவில் கொண்டுவந்து வெற்றிகரமாகச்

செயலாற்றும் செயல்வீரராகத் திகழ்ந்தவர். உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபை உறுப்பினராகவும், கிளைக்குழுவின் அங்கத்தவராகவும், இயக்குனர்சபை உறுப்பினராகவும், உழவு இயந்திரச்சங்கச் செயலாளராகவும், விவசாயிகள் சம்மேளன அமைப்பின் செயலாளராகவும், தலைவராகவும், உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி அபிவிருத்திச் சங்க உறுப்பினராகவும், விஸ்வகுல வீரகத்திவிநாயகர் ஆலய திருப்பணிச் சபைச் செயலாளராகவும், ஸ்ரீபத்திரகாளி அம்பாள் தேவஸ்தான திருப்பணிச்சபைச் செயலாளராகவும் விளங்கிய இவர் ஒரே நேரத்தில் பல்வேறு பணிகளைச் செய்த உத்தமரே என்றால் மிகையாகாது.

வடமராட்சிப் பாடசாலைகளில் பௌதீகவளத்தை நிறைவு செய்வதற்கான வேலைகளைக் குறிப்பாகத் தளபாட வேலைகளைத் தரமான முறையில் நேர்மையாகச் செய்தார் என்று அப்பாடசாலைச் சமூகத்தினரால் பராட்டப்பட்டவர். ஆலயங்களின் கும்பாபிஷேகம் பூஜை விதிமுறைகளை நன்கு அறிந்து சமயக் குருமார்களுடன் சேர்ந்து கோயிற் திருப்பணிகளைச் சிறப்பான முறையில் நடத்தி முடிக்கும் செயல்வீரம் நிறைந்தவராகவும் திகழ்ந்தார்.

இவர் உற்றார், உறவினர், நண்பர்கள் இன்னும் பல்வேறுபட்ட நபர்களுடன் அன்பாகவும் பண்பாகவும், புன்சிரிப்புடனும் உரையாடி வாழ்ந்தவர். மனிதனை அன்பினாலும் பண்பினாலும் மதிப்பிடுவதை மட்டுமே அளவுகோலாக ஏற்றுக்கொண்டவர் அமரர் ஸ்ரீரங்கநாதன். இவர் 24.03.2009 அன்று இவ்வுலக வாழ்வை நிறைவு செய்தார்.

நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை என்னும்
பெருமை உடைத்து இவ் உலகு.

**Yesterday he was, but tody he is not : thi is the glory of the earth**

*- மனைவி இரத்தினேஸ்வரி ஸ்ரீரங்கநாதன்*

# அமரர் பெருமை

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்**
**தெய்வத்துள் வைக்கப் படும். (குறள் - 50)**

அமரர் அப்பாத்துரை ஸ்ரீரங்கநாதன் அவர்களது பெருமைகள் பற்றி , அவரை அறிந்த குடும்பத்தவர், கல்விச் சமூகத்தினர், ஆலய நிர்வாகத்தினர், பொதுநலச் சேவையாளர்கள் மற்றும் நண்பர்கள் கூறியவை.



# அமரர் பெருமை

## இதயம் கதறும் இறுதி மடல்...

*அன்புள்ள அப்பாவுக்கு,*

உங்கள் மகன் யசோ எழுதும் இறுதி பாசமலர். நான் உங்களை வந்து பார்க்க முடியாத நிலையில் தனியாகத் தவித்துக் கொண்டு இருக்கின்றேன். தயவு செய்து என்னை மன்னிக்கவும். இந்த நிலையில் நாங்கள் எல்லோரும் இருப்பதற்கு நீங்கள் மட்டுந்தான் காரணம். என்னதான் இருந்தாலும் எல்லாவற்றையும் விட ஆண்டவன் உங்கள் மீது அதிகமாக அன்பு வைத்துள்ளான் என்பதை நிரூபித்து விட்டான். அப்பா நீங்கள் அம்மா, சுகன், கமல், அப்பம்மா ஆகியோரைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். அவர்கள் எல்லாரையும் நான் கவனமாகப் பார்த்துக் கொள்வேன். நீங்கள் எல்லோரையும் மேல் இருந்து பார்த்துக் கொண்டு இருப்பீர்கள். ஆனால் நாங்கள் யாரும் உங்களைப் பார்க்க முடியாது. அம்மாவை நினைத்தால்தான் பெருங்கவலையாக இருக்கிறது. நீங்கள் ஒன்றை நினைத்தும் கவலைப்படாதீர்கள். நான் எல்லாவற்யையும் பார்த்துக் கொள்வேன். நீங்கள் நிம்மதியாக நித்திரை கொள்ளுங்கள். சுகன், கமல் உங்களை வந்து எழுப்ப மாட்டார்கள். அப்பா நீங்கள் யாருக்கும் எந்த ஒரு உதவி வேண்டுமென்றாலும் செய்வதற்காக அந்த இடத்திற்கு உடனே போய் நிற்பீர்கள். இப்போது நீங்கள் ஆண்டவனுக்காக உதவி செய்யப் போய் விட்டீர்கள். அதை நினைத்தால் பெருமையாக இருக்கிறது. நீங்கள் உங்களைப் பற்றி எப்போதும் கவலைப் பட்டது கிடையாது. மற்றவர்களைச் சந்தோசமாக வைத்து இருக்க வேண்டும் என்று தான் எப்போதும் நினைப்பீர்கள். எப்போதும் எங்களை மறந்து விடாதீர்கள். உங்களை நாங்கள் அப்பாவாக மட்டும் நினைக்கவில்லை, கடவுளுக்கும் மேலாக வணங்கினோம். இனியும் வணங்குவோம்.

உங்கள் மீதான அன்பையும் பாசத்தையும் என்றும், எப்போதும் மறவாத.....

**- அன்புமகன் ஸ்ரீ. யசோதரன் (கனடா) -**

# வருமுன் சென்றீர்...

*பாசமுள்ள அப்பாவுக்கு,*

24.03.2009 அன்று தொலைபேசியில் வந்த செய்தியை இன்றும் நம்பமுடியவில்லை. நீங்கள் இருக்கிறீர்கள் என்ற நம்பிக்கையுடன்தான் நான் இப்பொழுதும் வாழ்ந்துகொண்டிருக்கிறேன். என்னைப் படிப்பித்து கல்வியில் உயர்த்திக் க.பொ.த. உயர்தரத்தில் 3A பெற்றபோது நீங்கள் அடைந்த மகிழ்ச்சி இப்போதும் என் கண்முன் நிற்கிறது. என்னைப் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு அழைத்துச் சென்று அங்கு சேர்த்தபின்பு விடுமுறை வரும்போது வீட்டிற்கு வந்து எங்களைப் பார்க்கவேண்டும் என்று அடிக்கடி கூறிவிட்டுச் சென்றீர்கள். விடுமுறை கிடைத்தது; ஆனால் நான் வருவதற்கு முன்னரே நீங்கள் போய்விட்டீர்கள். நான் வந்தேன் உங்களை இந்த நிலையில் பார்ப்பேன் என்று கனவிலும் நினைக்கவில்லை. அம்மாவையும், தம்பிமாரையும், என்னையும் தனியே தவிக்கவைத்துவிட்டு எங்கு சென்றீர்கள்? எங்கு சென்றாலும் எனக்குக் கட்டாயம் கூறிவிட்டுத்தானே போவீர்கள். இப்போது மட்டும் போகும்போது எப்போது திரும்பி வருவேன் என்று சொல்லாமல் போய்விட்டீர்கள்.

எங்களுடைய ஒவ்வொரு முயற்சியிலும் ஒவ்வொரு மூச்சிலும் உங்களை நன்றியோடு நினைப்போம். நீங்கள் எப்போதும் எம்முடனேயே இருக்கிறீர்கள். எம்மைவிட்டுப் பிரியவில்லை. அருவ உலகில் எம்மோடு வாழ்கிறீர்கள். உங்களின் இலட்சியமே உங்கள் பிள்ளைகள் நன்றாக உயர்ந்த நிலையில் வாழவேண்டும் என்பதுதானே! அப்பா.... அதை நாம் நிச்சயம் நிறைவேற்றுவோம். உங்களை எப்போதும் நினைத்துக்கொண்டிருப்போம்

**- மகள் ஸ்ரீ. சுகன்யா -**
(பேராதனைப் பல்கலைக்கழகம்)

# மீண்டும் உங்கள் மகன்...

***அன்புள்ள அப்பா,***

வருத்தத்திற்கு மருந்து எடுக்க என்று சென்றீர்கள். ஆனால் நீங்கள் இப்படித் திரும்பி வருவீர்கள் என்று நான் எண்ணிக்கூடப் பார்க்கவில்லை. அன்பினால் எம்மை ஆண்ட தந்தை நீங்கள். அறிவின் பொக்கிசமாக வழிகாட்டினீர்கள். இன்று எம்மைத் துன்பக்கடலில் விட்டு விட்டு எங்கு சென்று விட்டீர்கள்? எனக்குத் தந்தையாகவும், சகோதரனாகவும், தோழனாகவும் விளங்கினீர்கள். எனக்கு எந்தக்குறையும் நீங்கள் வைக்கவில்லை. பாசமுடன் பழகி உங்களைவிட உங்கள் பிள்ளைகளையே அதிகமாக நேசித்தீர்கள். நான் பரீட்சையில் சித்தியடைந்தபோது அக்காவைப்போல நீயும் பட்டம் பெறவேண்டும் என்று கூறினீர்கள்.

நீங்கள் கூறியதுபோல வாழ்க்கையின் ஒவ்வொரு படிகளிலும் நாம் வெற்றியுடன் முன்னேறிச் செல்வோம். எம்மைத் தெய்வமாக இருந்து நீங்கள்தான் வழிநடத்த வேண்டும். நீங்கள்தான் எங்கள் குடும்ப தெய்வம். அடுத்த பிறவியிலும் மீண்டும் உங்கள் மகனாகப் பிறக்கவே வேண்டுகிறேன்.

அப்பா!

நீங்கள் எனது மூச்சின்
ஒவ்வொரு வீச்சிலும் வீற்றிருக்கிறீர்கள்.
எனது வாழ்வுப் பாதையின்
ஒவ்வொரு வழியிலும் வழிகாட்டுவீர்கள்.
நான் வணங்கும் தெய்வங்களின்
வடிவமாக விளங்குகிறீர்கள்.
உங்கள் பாதங்களை வணங்குகிறேன்.

**- மகன் ஸ்ரீ. கமலதர்சன்**

# என்னிலும் இனியான்...

## - அமரரைப் பற்றி ஈழத்தின் முதுபெரும் தமிழாசிரியர் -

அடக்கம் அமரருள் உய்க்கும். இதற்கு இலக்கணமாய் வாழ்க்கை நடாத்தி வாழ்ந்தவரே என் இனிய நண்பர் அமரர் ஸ்ரீரங்கநாதன். பழகுவதற்கு மிகவும் இனிமையானவர். இன்சொல் அன்றி வன்சொல் பேசி அறியார். ஒரு சிறந்த கடமை வீரன். கண்ணியம் நிறைந்தவர். நான் கல்லூரியின் அதிபர் பொறுப்பை ஏற்றதும் கல்லூரியின் பௌதீக வளத்தைப் பெருக்குவதில் எம்மோடு இணைந்து செயற்பட்டவர். நல்ல ஆலோசனைகள் பலவற்றைத் தந்தவர். தனது உடல் உழைப்பையும் முழுமையாக அர்ப்பணிப்போடு கொடுத்தவர். அவரது சமூக சேவையில் உண்மை, நேர்மை, தன்னடக்கம், ஊருக்கு உழைத்தல் முதலான நல்லியல்புகளை அவதானித்திருக்கின்றேன். கடின உழைப்பும் சோர்விலா மனமும் அவரது உயர்வுக்கு வழிகோலின. அன்னாரது நன்னோக்கும், நற்செயலும் அவரது பிள்ளைகளின் உயர்வுக்கும் உறுதுணையாயின.

" என்னில் யாரும் எனக்கு இனியாரில்லை
என்னினும் இனியான் ஒருவன் உளன்"

என்ற நாவுக்கரசர் கூற்றுக்கு இலக்கணமாயினான் என் இனிய நண்பன் அமரர் ஸ்ரீரங்கநாதன்.

அன்னாரது பிரிவினால் துன்புறும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவரது ஆத்மா சாந்தியடைக...

திரு. கி. நடராசா
முன்னாள் அதிபர்,
யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி

# கல்லூரியின் மைந்தன் ஸ்ரீ...

அமரர் அப்பாத்துரை ஸ்ரீரங்கநாதன் ஒரு சிறந்த மனிதன். மனிதர்களில் மிகவும் வித்தியாசமான பண்பு கொண்டவர். நான் அவரை 1997ம் ஆண்டு யூலை மாதம் முதன் முதலில் பாடாசலையின் கட்டிட வேலைத்திட்டம் தொடர்பாகச் சந்தித்தேன். சாம்பல் மேடாகக் காட்சியளித்த எமது கல்லூரியை அப்போதைய அதிபர் பெருமதிப்புக்குரிய கி. நடராசா அவர்களுடனும் என்னுடனும் சேர்ந்து கட்டிடங்கள் பல கட்டி நிமிர்த்துவதில் தனது பங்களிப்பைச் சிறப்பாக வழங்கிச் செயலாற்றியவர். கல்லூரியிலுள்ள கட்டிடங்களின் கூரைக்கதவுகள், யன்னல்கள், தளபாடங்கள் என்பன இவரின் பொறுப்பில் வடிவமைக்கப்பட்டவையாகும்.

இப்போது எமது கல்லூரியிலுள்ள தளபாடங்கள் ஸ்ரீயின் சிறந்த செயற்பாட்டினைக் காட்டி நிற்கின்றன. தன்னிடம் கையளிக்கப்பட்ட பொறுப்பை மிகவும் சிறந்த முறையில் செயற்படுத்திக் கையளிப்பார் மிகச்சிறந்த் செயல்வீரன் என்பதைப் பல இடங்களில் நிரூபித்துள்ளர்.

எமது கல்லூரியை ஆழமாக நேசித்தவர். எமது கல்லூரியின் மைந்தன் 'ஸ்ரீ' யின் மறைவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக.

ஓம் சாந்தி!

**க. தர்மலிங்கம்**

அதிபர் ,

யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.

# பெருந்துயரில் பங்குகொள்வோம்...

எமது பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவி சுகன்யா அவர்களின் பாசமிகு தந்தை அமரர் அப்பாத்துரை ஸ்ரீரங்கநாதன் அவர்களின் பிரிவுச் செய்திகேட்டுப் பெருந்துயரடைந்தோம். அன்னாருக்கு எமது கல்விச் சமூகத்தின் கண்ணீர் அஞ்சலிகள். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பரம்பொருளைப் பிரார்த்திப்பதோடு அவரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி!

கல்விச் சமூகம்.
கலைப்பீடம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

# அறத்தால் கனிந்த பழம்...

அமரர் அப்பாத்துரை ஸ்ரீரங்கநாதன் அவர்கள் எமது சகமாணவன் கமலதர்சனின் அன்புத் தந்தை. சமூகப்பணியையும், சமயப்பணியையும் தன்சொந்தப் பணியாகக் கருதிச் சோர்விலாது செய்தவர். அவரின் திடீர் மறைவு எமையெல்லாம் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. நல்லான்மா விண்ணோக்கி விரைந்தது. அறத்தால் கனிந்த பழமொன்று உதிர்ந்தது. தர்மதேவன் இருகரம் கூட்டி எடுக்கிறான். பண்ணிய புண்ணியம் பூக்களாய் மலர்கின்றன. பாரெங்கும் நறுமணம் பாரெங்கும் பரவுகிறது. எமது நண்பன் கமலதர்சனின் தந்தையின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆறுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஓம் சாந்தி!

**கலைப்பிரிவு மாணவர்கள்**
2008 உயர்தரம்
யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி

# இறைவனை நேசித்த இனியன்...

அமரர் அப்பாத்துரை ஸ்ரீரங்கநாதன் அவர்கள் 24.03.2009 இல் காலமாகிவிட்டார் என்ற செய்தியைக்கேட்டு அதிர்ச்சியடைந்தேன். அமரர் அவர்கள் அடியேன்மீது மதிப்பும், மரியாதையும் வைத்திருந்தார்கள். விஸ்வகுல ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய மஹா கும்பாபிஷேகத்தின்போது ஸ்ரீ அவர்கள் எங்களுடன் பழகிய விதமும் எம்மை அனுசரித்த விதமும் இன்றும் மறக்கமுடியாதவை. அத்துடன் கடந்த ஆண்டு நடைபெற்ற விஸ்வகுல ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேக மண்டலாபிஷேகப் பூர்த்தியையும் முன்னின்று நடாத்திய ஒரு செயல்வீரர் அவர். இவர் ஒரு சிறந்த சமய சமூகத் தொண்டனாக விளங்கிச் சமூகத்தில் மதிப்புக்குரிய அங்கீகாரத்தைப் பெற்றவர். இதனை இவரின் இறுதி ஊர்வலம் நிரூபித்ததை யாவரும் அறிவர். இவர் தன்னையும் தனது குடும்பத்தையும் நேசித்ததை விடப் பன்மடங்கு இறைவனை அதிகம் நேசித்தவர். இவரது இழப்பு நம் அனைவருக்கும் மிகப்பெரும் கவலையாகும். இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் இவரது குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு இவரின் ஆத்மா சாந்தியடைய வல்வை நகரின் எல்லாம்வல்ல காவல் தெய்வமாக விளங்கும் ஆதிபராசக்தியை இறைஞ்சுகிறேன்.

ஓம் சாந்தி!

**சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணி தேசிகர்**
சிவாச்சாரிய பீடாதிபதி, அகில உலக சைவக்குருமார் சம்மேளனம்

# ஆத்மா சாந்தியடையட்டும்...

உடுப்பிட்டி அல்லாண்டி வைரவர் கோவிலடியைச் சேர்ந்த அப்பாத்துரை ஸ்ரீரங்கநாதன் (ஸ்ரீ) அவர்களின் மரணச்செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைந்தேன். அவரது குலதெய்வமாகிய விஸ்வகுல தெய்வமாக வீரகத்திப் பிள்ளையார் இருந்தாலும் காவல் தெய்வமாகப் பத்திகாளியம்மன் இருந்தாலும் அவர் வைரவர் மீது மிகுந்த பற்றுக்கொண்டவர். முதலில்

வைரவரை வணங்கிவிட்டுத்தான் பிள்ளையார், காளி கோவிலுக்கு அவர் செல்வது வழக்கம். எமது வைரவர் ஆலயத்திற்கு மிநீண்டகாலமாகத் தொண்டு செய்தவர், ஸ்ரீ. அவரது தொண்டை என்னால் என்றுமே மறந்துவிட முடியாது. அவரது இழப்பால் கதறும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல வைரவப்பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி!

**சிவஸ்ரீ சுப்பிரமணிய தண்டபாணி தேசிகர்**
பிரதமகுரு, அல்லாண்டி வைரவர் ஆலயம்,
உடுப்பிட்டி.

## கூட்டுறவாளன்....

அமரர் அ. ஸ்ரீரங்கநாதன் அவர்கள் எமது சங்கத்தின் இமையாணன் கிளையின் பொதுச்சபை உறுப்பினராகச் சேவையாற்றியமையையும், எரிபொருள் நிரப்பு நிலையம் அமைக்கும் முயற்சியில் முன்னோடியாகச் செயற்பட்டு அரும்பணியாற்றியமையையும் நன்றியுடன் நினைவு கூருகின்றோம். அவரின் இழப்பு எமக்கும், எமது சமூகத்திற்கும் பேரிழப்பாகும். அன்னாரின் பிரிவுத்துயரில் நாமும் பங்குகொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம்சாந்தி!

**பணிப்பாளர், பணியாளர்கள்**
உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம்

## சேவையின் செம்மல்...

அமரர் அப்பாத்துரை ஸ்ரீரங்கநாதன் அவர்கள் நண்பருக்கு நண்பராகவும், பண்பாளர்களுக்குப் பண்பாளராகவும், தொண்டர்களுக்குத் தொண்டராகவும் வாழ்ந்து காட்டியவர். நெஞ்சுறுதியோடு எந்தக்காரியத்திலும் துணிந்து இறங்கியவர். மக்கள் சேவையே மகேசன் சேவை எனும் மந்திரத்தை

நன்கு அறிந்து செயலாற்றியவர். எந்த எதிர்ப்புக்கள் வந்தாலும் அவற்றை ஒதுக்கித் தள்ளிவிட்டுச் சேவையொன்றே தனது நோக்கமென்று அல்லும் பகலும் அலுக்காமல் சலிக்காமல் பாடுபட்டவர். சுயநலத்தை உதறித்தள்ளிவிட்டு பரநலத்தை வேண்டிநின்றவர். அவர் பலகாலம் பாடுபட்ட முயற்சிகளும் இலட்சிய வேள்விகளும் என்றும் வீண்போகாதவை. அவரை என்றும் மறக்க மாட்டோம். அவரின் நினைவுடன் சேவை ஒன்றையே இலட்சியமாகக் கொண்டு அடியொற்றிச் செல்வோம்.

**பக்தர்கள்**
உடுப்பிட்டி விஸ்வகுல வீரகத்தி விநாயகர் ஆலயம்,
உடுப்பிட்டி ஸ்ரீ பத்திரகாளியம்பாள் ஆலயம்

## விவசாய சம்மேளனத்தின் வித்து...

அமரர் அப்பாத்துரை ஸ்ரீரங்கநாதன் அவர்கள் இமையாணன் மேற்கு விவசாய சம்மேளனத்தின் முன்னைநாள் பொருளாளராக இருந்தவர். தற்போது தலைவராக இருந்தவர். மக்களுக்காக நிறைந்த சேவைகள் ஆற்றியவர். எமது பகுதியில் விவசாயம் செய்யும் மக்களுக்கு விவசாயம் சம்மந்தமான தேவைகளை அறிந்து அவற்றை உரிய உத்தியோகத்தர்களிடம் எடுத்துரைத்து அதற்கான பயனை மக்களுக்குப் பெற்றுக்கொடுத்த ஒரு நல்ல சேவையாளர். அர்ப்பணிப்போடு நீண்டகாலம் சேவைசெய்து கொண்டிருந்தவர். இவரின் திடீர்ப் பிரிவு எம்மை ஆழ்ந்த துயரில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஓம் சாந்தி!

**நிர்வாகத்தினர், மக்கள்**
விவசாய சம்மேளனம்,
இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.

# திறம்படச் செய்யும் திறமையாளர்...

அமரர் அப்பாத்துரை ஸ்ரீரங்கநாதன் அவர்கள் எமது சங்கத்தின் பொதுச்சபை உறுப்பினராகவும், கிளை 02 இன் நிர்வாக உறுப்பினராகவும் மனமகிழ்வோடு பணியாற்றியவர். மனிதம் நிறைந்த மானுடனாக எம்மத்தியில் வாழ்ந்து காட்டியவர். மற்றவர் துன்பத்தில் பங்குகொள்பவர். அவரது பிரிவு அவர் பற்றிய நினைவுகளை மேலும் மேலும் வளர்த்துச் செல்கிறது. அவர் எம்மோடு கொண்ட உறவுகள் நினைவுகளாகத் தொடர்கின்றன. அவரது பிரிவால் கலங்கிநிற்கும் அவர் துணைவியார், பிள்ளைகள், உற்றார், உறவினர் நண்பர்கள் எல்லோருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். சொல்வது என்பது எல்லோருக்கும் எளிது. சொல்லிச் செய்வதும் சொல்லாமல் செய்வதும், நினைத்ததைச் செய்து முடிப்பதும் எல்லோருக்கும் எளிதல்ல. அது எம்மத்தியில் வாழ்ந்த ஸ்ரீ போன்ற திறமையாளருக்கே உரியது. ஊருக்கும், உலகிற்கும் செய்த சேவையெல்லாம் போதுமென்று ஸ்ரீரங்கநாதனின் பாதார விந்தங்களுக்குச் சேவைசெய்யச் சென்ற அமரர் ஸ்ரீரங்கநாதனின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

**நிர்வாக உறுப்பினர்கள்,**
கிளை 02, உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்,
இமையாணன் மேற்கு.

# சேவையின் காவலன்...

அமரர் திரு. அ. ஸ்ரீரங்கநாதன் எனது நல்ல நண்பன். இவருடன் நெருக்கமாகப் பழகும் வாய்ப்பு எனக்கு அண்மைக்காலத்தில் தான் ஏற்பட்டது. அமரர் கடந்த பத்து வருடங்களாக இமையாணன் மேற்கு விவசாயச் சம்மேளனத்தின் பொருளாளராக இருந்து சிறப்பாகப் பணிபுரிந்து கடந்த இரண்டு வருடங்களாகச் சம்மேளத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு மிகச் சிறந்த பணியாற்றியவர். எமது பிரிவிலுள்ள அனைத்து

விவசாயிகளையும் ஸ்ரீ- நன்கு அறிவார். கமநலசேவைக் கழகத்தினால் விவசாயிகளுக்கு வழங்கப்படும் பங்கீட்டுப் பொருட்கள் எமது பிரிவில் வதியும் அனைத்து விவசாயிகளுக்குப் பாரபட்சமின்றி வழங்கப்படவேண்டும் என்பதில் மிகுந்த கண்ணியத்துடன் செயற்பட்டவர் ஸ்ரீ.

எமது கழக நிர்வாக அங்கத்தவர்களுடன் சுமூகமாகக் கதைத்துச் சேவை செய்பவர். பழகுவதற்கு இனிமையானவர், எளிமையானவர். பொதுமக்கள் எந்தநேரத்திலும் ஸ்ரீயை அணுகி விவசாயம் தொடர்பான தங்கள் பிரச்சினைகளை, கஷ்டங்களை தெளிவுபடுத்தித், தமது தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ள முடியும்.

இவரை இழந்து ஏங்குவது இவரது குடும்பமும், உறவுகளும் மட்டுமல்ல. எமது கழகமும், கழக உறுப்பினர்களும், கழகத்தின் கீழுள்ள விவசாயிகளுமாவர்.

"ஜனனம் என்பது எந்தளவிற்கு உண்மையோ
மரணமும் அந்தளவிற்கு நிச்சயமே"
இதை எண்ணி மனதில் ஆறுதல் அடைவோமாக.

அன்னாரைப் பிரிந்து ஏங்கும் குடும்பத்தினருக்கு விவசாயக் கழகத்தின் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**செயலாளர்**
விவசாய சம்மேளனம்,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

# தந்தையாக வாழ்ந்த அண்ணா...

*எனது அன்பான அண்ணாவுக்கு!*

எமது தந்தை இறக்குமுன்னே தனது பொறுப்புக்களை உங்களிடம் ஒப்படைக்கும்போது உங்களுக்கு வயது சுமார் 18 ஆகும். அன்றிலிருந்து இன்றுவரை உங்கள் இரு தங்கைமாரையும் உங்களுடைய இரு கண்களைப்போலப் பாதுகாத்து வளர்த்தீர்கள். உங்களுடைய கண்கள்

என்று அடிக்கடி எங்கள் இருவரையும் சொல்வீர்கள். நாங்கள் பெருமைப்படுவோம். அப்படியாக எங்களை வளர்த்துப் படிப்பித்து நல்ல இடத்தில் திருமண வாழ்க்கை அமைத்துக் கொடுத்து அதைப் பார்த்து நீங்கள் சந்தோஷப்பட்டதை நினைத்து நாங்கள் அடிக்கடி சந்தோஷப்படுவோம். அந்தக் காலகட்டம் எங்கள் தந்தை இறந்து உங்கள் வயது 25 ஆகும்.

நான் உங்களுக்கு எப்படி நன்றிசொல்வதென்றே தெரியவில்லை. உங்களை அண்ணா, தகப்பன், தெய்வம் என்ற மூன்று நிலைகளில் வைத்து நினைக்கிறேன். என் பிள்ளைகளை உங்கள் பிள்ளைகள் போல வாழ்த்தி வளர்த்தீர்கள். என் பிள்ளைகளைப் பெயர் சொல்லிக் கூப்பிடும்போதும் கடைசியில் செல்லமாகக் குட்டி என்றும் சொல்லுவீர்கள். பாசமே உருவாகிநின்ற உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

அன்புத் தங்கை
**K. L.ஸ்ரீபுஸ்பராணி**

## ஒளி விளக்கு...

எனது அன்பான அண்ணாவை அம்மாவின் கர்ப்பத்தில் உருவாக்கி, கர்ப்பத்திலிருந்து பிரித்தெடுத்து இம் மண்ணுலகில் 53 வருட காலமாகச் சீரும் சிறப்புமாக வழிநடத்தி வந்த இயேசு கிறிஸ்துவுக்கு எமது நன்றிகள். எமது வாலிபப் பராயத்தில் எமது அன்புத் தந்தையை இழந்தபோதிலும், அம்மாவையும் என்னையும், என்சகோதரியையும் தந்தையாகவும் சகோதரனாகவும் இருந்து சீரிய வழியில் வழிநடத்தியவர் எங்கள் அண்ணா. இரவு பகலென்று பாராமல் உழைத்து எமது குடும்பத்தையும் கவனித்து, எமது கல்விக்காகவும் பெரும்பாடுபட்டு உழைத்தார். எமது குடும்ப வாழ்க்கை சிறப்பாக அமைவதற்குச் சகல விதத்திலும் உதவிகளும், ஒத்தாசைகளும் வழங்கி உதவினார். இம்மண்ணுலகத்தில் தோன்றிய காலந்தொட்டு சிறந்த ஒளிவிளக்காக வாழ்ந்தவர் எங்கள் அண்ணன். அவரது நினைவுகள் என்றும் எம்மைவிட்டுப் பிரியாது.

ஓம் சாந்தி!

அன்புச் சோதரி
**R. L. ஸ்ரீலோகராணி**

# தாங்கமுடியாத பிரிவு...

*எனது அன்பான மைத்துனன் ஸ்ரீ,*

நீங்கள் என்மேல் வைத்திருந்த அன்பை நான் நன்கு அறிவேன். நான் உங்களைப் பிரிந்து 19 வருடங்கள். இன்னும் ஒரு வருடத்தில் நானும் எனது இரண்டாவது மகள் ரஜீனாவும் உங்களிடம் வருவதாக எண்ணியிருந்தோம். கடவுள் உங்களை எங்களிடமிருந்து பிரித்துவிட்டார். இந்தப் பிரிவு எம் வாழ்நாளில் தாங்கமுடியாத பிரிவாகும். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

மைத்துனர் **க. லோகநாதன் (கிளி)**

# பண்பாளன் ஸ்ரீ...

*அன்பின் மைத்துனர் ஸ்ரீ,*

நீங்கள் உங்கள் குடும்பத்தாரில் எவ்வளவு தூரம் அன்பாக இருந்தீர்களோ அதேபோல எங்களிலும் உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் எல்லோரிலும் அளவுகடந்த அன்பைக் காட்டினீர்கள். எங்கள் பிள்ளைகளான லோ. நிரூஜா, லோ. நிலேஸ் ஆகியோருடன் அன்புடன்பேசி, பண்புடன் பழகி ஆலோசனை கூறி வழிகாட்டினீர்கள். இன்று எங்கே சென்றுவிட்டீர்கள்? நாங்கள் தாய்நாட்டுக்கு மூன்றுதடவை வந்தபோது எங்களுடன் நீங்கள் காட்டிய அன்பு, பாசம் எல்லாவற்றையும் எண்ணும்போது கண்ணீர் வழிகிறது. உங்களுடைய ஆத்மா சாந்தியடைய ஒவ்வொரு நாளும் நாம் கடவுளைப் பிரார்த்திப்போம்.

உங்களது பிரிவு தாங்கமுடியாதது. உங்களது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கிறோம். உங்களது மனைவி, மக்கள், பெற்றோர் அனைவரையும் ஆண்டவர் ஆசீர்வதித்து அவர்களுக்குரிய இலட்சியப் பாதையில் அவர்களை வழிநடாத்துவாராக.

"நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல் எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களைத் தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்போது எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தைகளையும் காத்து வழிநடத்தும்"

(பிலிப்பியர் 4:6.7)

அன்பு மைத்துனன் **இ. லோகநாதன்**

# எந்நாளும் தொழுவோம்...

அன்புள்ள அத்தான்,

உங்களின் பிரிவுச்செய்திகேட்டு பெரும் அதிர்ச்சி அடைந்தோம். தொலைபேசியில் உரையாடும்போது அறிவுரை கூறி அன்பாகப் பேசுவீர்கள். வாழ்க்கையில் உயர்நிலையில் நான் வாழ நீங்கள் செய்த உதவிகள்பல. அவற்றை ஒருபோதும் மறக்கமாட்டேன். இறைவன் உங்களைத் தனது கரத்தினால் அணைத்துக் காப்பார்.

நீங்கள் கூறிய அறிவுரைகளின்படி வையத்துள் சிறப்பாக வாழ்ந்து சமூக, சமயப் பணிகளில் ஈடுபடுவோம். உங்கள் பாதையில் தொடருவோம். உங்களை நினைவிலிருத்தி எந்நாளும் தொழுவோம். உங்கள் ஆத்மா சாந்தியடையட்டும்.

ஓம் சாந்தி!

**திருமதி. எஸ். ராஜேஸ்வரி** (சின்னன்)

(லண்டன்)

# நண்பனின் நல்ல தந்தை...

எமது ஆருயிர் நண்பர் ஸ்ரீ. கமலதர்சன் அவர்களின் அன்புத் தந்தை அப்பாத்துரை ஸ்ரீரங்கநாதன் அவர்களின் பிரிவு எமக்குப் பேரிழப்பாகும். கமலதர்சனின் தந்தையாக இருந்து எமக்கும் ஆலோசனைகள் கூறியவர். எமக்கு நல்லதொரு நண்பனைத் தந்தவர். காணும்பொதெல்லாம் இன்முகத்துடன் இனியமொழிகூறி வரவேற்பவர். இனி அவரைக் காணமுடியாது.

காலன் அவரைக் கூட்டிச் சென்றுவிட்டான். அவரின் பிரிவால் பெருந்துயருற்றிருக்கும் எமது நண்பன் கமலுக்கும், அவரது தாயாருக்கும், சகோதரிக்கும் ஆறுதல் கூறுவதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

**கமலதர்சனின் நண்பர்கள்**

## மக்கள் சேவையாளன்...

அமரர் அப்பாத்துரை ஸ்ரீரங்கநாதன் அவர்கள் நீறுபூசிய நெற்றியுடன் சிறப்புடன் பணியாற்றியவர். நல்ல பண்புகளையெல்லாம் தன்னிடத்தில் கொண்டவர். சாந்தம், பொறுமை, தயவு, அடக்கம் எனப் பலவற்றையும் தன்னுடைய ஆபரணங்களாகக் கொண்டு பலரும் புகழச் சீர்சிறப்பைப் பெற்று வாழ்ந்தவர். விநாயகப்பெருமானின் பாதங்களைத் தூய உள்ளத்தோடு தொழுது நின்றவர். அன்பும் ஆதரவும் உடையவர். மக்கள் சேவையே மகேசன் சேவையாய்ச் சமூகத்திற்கு வாழ்ந்து காட்டியவர். திடீரென்று வந்த தெய்வத்தின் அழைப்பால் எம்மைவிட்டுப் பிரிந்து சென்றார். அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

**ந. அற்புதராஜா குடும்பத்தினர்**
இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.

## நட்பின் விடிவெள்ளி...

அமரர் அ. ஸ்ரீரங்கநாதன் என் இனிய நண்பன். ஆருயிர்த் தோழன்; நாங்கள் இருவரில் ஒருவராகவும் ஒருவரில் இருவராகவும் வாழ்ந்து வந்தோம். அவரது உடல் அழிந்தாலும் அவர் என்னுடன் உலாவிய நினைவும், உரையாடிய நினைவும் என் நெஞ்சைவிட்டு அகலாது. நட்புக்கு உரமிட்ட நண்பன் இன்று என்னுடன் இல்லை. அப்பன் என்று அன்பாக அணைத்து நட்புமொழிபேசும் நல்ல நண்பனை இழந்துவிட்டேன். நண்பா நீ இன்று

சுடராகிவிட்டாய். நட்புக்கு ஒளி தந்துவிட்டாய். உன்னைக் கரங்குவித்து வணங்குகிறேன். உனது ஆத்மா உயர்ந்த ஆத்மாவாக மாறிவிட்டது.

ஓம் சாந்தி!

ஆருயிர்த் தோழன்
**விக்னேஸ்வரன் (அப்பன்)**

# நிழலாடும் நினைவுகள்...

அமரர் அப்பாத்துரை ஸ்ரீரங்கநாதன் அவர்களின் பிரிவு இன்றும் கண்ணை நனைக்கிறது. இதயத்தின் ஒவ்வொரு அறையிலும் அவரது நினைவுகள் நிழலாடுகின்றன. நேற்றிருந்த உறவொன்று இன்று இல்லாமற் போய்விட்டது. காத்திருந்த உறவுகள் கண்விழித்துப் பார்த்திருக்க பார்த்திருந்த மரணம் அவரைப் பறித்துச் சென்றுவிட்டது. அவரது நினைவுகளுடன் நாம் மௌனமாக அழுகின்றோம். அவர் பேசிய வார்த்தைகளையும் காட்டிய பரிவுகளையும் நினைத்துக் கதறுகிறோம். எமக்கருகில் அவர் இல்லை. அவரின் நினைவோடு நாம் வாழ்வோம்.

ஓம் சாந்தி!

**நா. சீவரத்தினம்**

# இளகிய மனத்தவர்...

அமரர் அப்பாத்துரை ஸ்ரீரங்கநாதன் அவர்கள் எமது ஊரின் வளர்ச்சிக்கு உரமூட்டி உன்னதமான பணி செய்தவர். உறவுகளுடன் பண்பாகப் பழகுவார். அவரின் பிரிவுச் செய்திகேட்டு நாம் ஆழ்ந்த துயரடைந்தோம். சேவைசெய்யும்போது தன்னை மெழுவர்த்தியாக்கிக் கொண்டு சேவை செய்தவர். பணத்தையும் பொருளையும்விடப் பாசத்தை முதன்மைப்படுத்தி வாழ்ந்தவர். என்றும், எப்போதும் ஈரநெஞ்சத்துடன் பழகுபவர். அவரின் பிரிவால் துயருறும் அவரின் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும், உற்றார் உறவினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த

அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி!

எஸ். கனகலிங்கம் மாமா குடும்பத்தினர்
(கே. பிரசாந்தன்)

## காலன் பறித்த மனித மலர்...

அமரர் அப்பாத்துரை ஸ்ரீரங்கநாதன் அவர்கள் எமது ஊர்மக்கள் நன்றாக இருப்பதற்காகச் சேவையாற்றியவர். தமது உறவினர்கள் எல்லோரையும் உயர்த்தவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். அவருடைய பூவுலக வாழ்க்கையைக் காலன் பறித்து விட்டான். அவரின் பிரிவு என்றும் எம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவர் நற்கதியடைவார் என்ற நம்பிக்கையில் ஆண்டவனின் பாதத்திலே கூடி வேண்டி நிற்கின்றோம். இதைத்தவிர எந்த வழியும் எமக்குத் தெரியவில்லை. அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆறுதல்கள்.

ஓம் சாந்தி

க. சுந்தரலிங்கம் குடும்பத்தினர்

## நெஞ்சைவிட்டகலா நினைவு...

அமரர் அப்பாத்துரை ஸ்ரீரங்கநாதன் எம்முடன் சிரித்துப் பேசி மகிழ்ந்து வாழ்ந்தவர். நாங்கள் உடுப்பிட்டிக்கு வரும்போது எங்களை வரவேற்று நன்கு உபசரிப்பவர். எங்கள் குடும்பத்திற்குச் சித்தப்பாவாகவும், மச்சானாகவும், சகோதரனாகவும் பாசமுடன் வாழ்ந்த நல்ல உறவு அவர். என்றும் அழியாத சித்திரமாய் எங்கள் மனதில் அவருடைய நாமமும் உருவமும், அவர் உதிர்த்த சொற்களும் பதிந்திருக்கும். அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

நகுலேஸ்வரன் குடும்பம்

## ஆத்மசாந்திக்காய் ஆராதிப்போம்...

அமரர் அப்பாத்துரை ஸ்ரீரங்கநாதன் அவர்கள் நட்பிற்கு உறைவிடமாகவும், சேவைக்கு இருப்பிடமாகவும் வாழ்ந்தவர். ஓயாது மற்றவர்களுக்காகப் பாடுபட்டவர். எவருக்கும் ஆபத்து என்றால் எந்நேரமானாலும் ஓடிவந்து உதவுபவர். இத்தகைய நல்லவரைக் காலன் ஞாலத்திலிருந்து பிரித்துச் சென்றுவிட்டான். யாரிடம் சென்று நாம் அழுது புலம்புவது. காலனுக்கும் காலனாக விளங்குகின்ற கடவுளைக் கைகூப்பி மனம், மொழி, மெய்களால் வணங்கி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பது மட்டுமே எமக்குள்ள ஒரேயொரு வழி. அவரின் ஆத்மா சாந்தியடையட்டும். அவரின் குடும்பத்தார்க்கு எமது அனுதாபங்கள்.

ஓம் சாந்தி!

**விஸ்வகுல இளைஞர்கள்**
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

## மனித மாணிக்கம்...

அமரர் அ. ஸ்ரீரங்கநாதன் அவர்களின் பிரிவு எம்மை ஆழ்ந்த துக்கத்தில் ஆழ்த்தியுள்ளது. நல்லோருக்கு இந்த உலகத்தில் இடமில்லை என்ற வாசகத்தை உண்மையாக்கியுள்ளது. அன்பு நிறைந்த சிரிப்பால் எல்லோரையும் அரவணைத்து வாழ்ந்தவர் அவர். அவரது உயிரைக் காலன் இரக்கம் சிறிதுமற்றுக் கவர்ந்து சென்றுவிட்டான். அவர் அழிந்தாலும் அவரது புன்சிரிப்பும், அவரது வாயில் பூத்த வார்த்தைகளும் என்றும் அழியாது. காலனின் திருவிளையாடலில் எம்மை விட்டுப்பிரிந்த ஸ்ரீ என்ற மனித மாணிக்கத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

**சாந்தன், சதீஸ், முருகா.**
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

# "SRI" A FAMOUS & POPULAR GENTLEMAN...

Late **Appathurai Sriranganathan**, A well known very famous and popular gentleman among the Visvakula people of Uduppiddy is no more today. His sudden and untimely death is a great shock not only to his family members and relations but also to everyone who had close, .contact with him.

His devoted service to the temples of "Kali Amman" and "Visvakula Pillaiyar" was marvellous. He took keen interest and I can without any hesitation declare that he has sacrificed his life for the re-construction and renovation works of these temples. He has very well organised the "Maha Kumbabishekam" of Visvakula Pillaiyar temple whieh was highly appreciated by almost all the citizens of Uduppiddy apart from caste, creed etc. He has also rendered his valuable service to the develop-ment of agriculture and the Co-operative Society of Uduppiddy.

It is of my opinion that he left for "HEAVEN" to continue his service there on the invitation of "ALMIGHTY" I am sure that by the grace of GOD his soul will definitely rest in peace.

***R. Oppilamany***

# Dear Mama...

***My Dear mama***

I love you so much mama and you will live in my heart forever. I always thought you'd always be there to run to for advices... and now God has taken you back. Please mama guide me through life, help me make the right decisions in life... I know you will watch over me from up above. More than me, I know mom

needs your endless support -please help her accept that God has taken you back, but you will still be a part of her life... she needs you until her last breath mama.. Please look after her from up above. I feel like talking to you forever... but I know it's time for you to go now... even so, I will talk to you and I know you will be listening from up above.

May God Bless Your Good Soul Mama. Good bye mama, have a safe trip to Heaven and I will talk to you soon.

**- Your Tharsana**

## Dear Mama...

***Dear mama***

Even though I came all the way here to see you for the very last time. I wasn't lucky enough to see you. I'm not wormed for I know that I will see you again one day from all the wonderful stories that you're my uncle. you were truly a saint on earth, I don't know if you knew tat or not.

Every time you called my house, you would always ask "When am I going to see my Rajeena kuttie?" I always said as soon as I finish my studies I was going to run to come see you with my dad, but sadly that's no more. I know that you looking Every time I see Ammama, Start to cry, because you kept her like a queen in the house and now all she does is cry. I know that for all the great things that you did, helping a lot of people, that they will now all take care of her. Your raised Kamal to be a strong, handsome man, that's why I'm not worried. I know that he will take care of Ammama, Aththai and Sukanya. Even though you are not hear, your memories will live on forever. you will always be in our hearts Mama, you were earths loss, but heaving gain I love you, Rest in Peace!

**Your Rajeena**

# திருக்குறள்

## அங்கவியல்

அமைச்சு

சொல்வன்மை

வினைத்தூய்மை

குறிப்பறிதல்

அவையறிதல்

அவையஞ்சாமை



# திருக்குறள்

## அங்கவியல்

### - அறிமுகக் குறிப்பு -

அங்கவியல் என்பது அரசியல் நடத்துவதற்கு ஒன்றுக்கு ஒன்று துணையான அங்கங்கள் ஆறினுடைய இயல்பு கூறும் திருக்குறளின் பகுதியாகும். படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்ற ஆறும் அங்கங்கள் ஆகும். இவ் ஆறும் சேர்த்தே அங்கவியல் என்று கூறப்படுகிறது. அரசுக்கு இவ் அங்கங்கள் அவசியமானவை. இதனால் திருக்குறளில், பொருட்பாலில் அரசியலின் பின்னர் அங்கவியல் வைக்கப்பட்டுள்ளது. அங்கவியலில்

அ. அமைச்சு
ஆ. சொல்வன்மை
இ. வினைத்தூய்மை
ஈ. குறிப்பு அறிதல்
உ. அவையறிதல்
ஊ. அவை அஞ்சாமை

ஆகிய நான்கு அதிகாரங்களும் குறள், பதப்பிரிப்பு, பொருள் என்ற அடிப்படையில் இங்கே தரப்படுகின்றன.

# அமைச்சு

## அதிகார வைப்பு

அமைச்சு என்பது அமைச்சனுடைய தன்மையாகும். அதாவது அமைச்சனுடைய குணங்களையும் செயல்களையும் அது குறித்து நிற்கும். இதனால் அங்கவியலில் அமைச்சு என்ற அதிகாரம் முதலில் வைக்கப்பட்டது.

## அமைச்சரது குணத்தன்மை

01. கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு

**பதப்பிரிப்பு :** கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு

**பொருள் :** செயல்மேற்கொள்ளும்போது அதற்கு வேண்டிய சாதனங்களும் தகுந்த சமயமும், அகற்கு ஏற்ப செய்யும் வழியும் செய்யும்படியான அருமையான செயலும் பொருந்தச் சிறப்புறச் செய்பவனே அமைச்சனாவான்.

02. வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு

**பதப்பிரிப்பு :** வன்கண் குடிகாத்தல் கற்று அறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு

**பொருள் :** உறுதியுடையவனாதலும், குடிமக்களுக்குத் தீமைவராது பாதுகாத்தலும் நூலறிவோடு நுண்ணறிவு பெற்றிருத்தலும், செயலை ஆளும் திறமை உடையவனாதலும் ஆகிய ஐந்தும் உடையவனே சிறந்த அமைச்சனாவான்.

03. பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்லது அமைச்சு

**பதப்பிரிப்பு :** பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்
பொருத்தலும் வல்லது அமைச்சு

**பொருள் :** அரசனுக்கு வேண்டியவர்களைச் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப விலக்கியும், வேண்டாதவர்களைச் சமயோசிதம்போல் விரும்பி அழைத்துச் சேர்த்தும் விலக்கி இருப்பவர்பால் ஆதரவு காட்டி அமைத்துக் கொண்டும் செயலைத் திறமையோடு செய்து முடிப்பவனே அமைச்சன் ஆவான்.

04. **தெரிதலுந் தேர்ந்து செயலும் ஒருதலையாச்**
**சொல்லலும் வல்ல தமைச்சு.**

பதப்பிரிப்பு : தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு

பொருள் : ஒரு செயலை மேற்கொள்ளு முன்னர் பல துறைகளிலும் ஆராய்ந்து தெரிந்து கொள்வதும், ஆராய்ந்த முடிவின்படியே செய்வதும். பின்னர் நிகழ்வதை முன்கூட்டியே அறிவினால் நிச்சயமாகச் சொல்வதும் ஆகிய ஆற்றலை உடையவனே அமைச்சன் ஆவான்.

05. **அறனறிந் தான்றமைந்த சொல்லானெஞ் ஞான்றுந்**
**திறனறிந்தான் தேர்ச்சித் துணை**

பதப்பிரிப்பு : அறன் அறிந்து ஆன்று அமைந்த சொல்லான் எஞ்ஞான்றும்
திறன் அறிந்தான் தேர்ச்சித் துணை

பொருள் : அரச நீதிகளை நன்கறிந்தவனாகவும், அறிவுநிறைந்து அமைதியோடு அரசர்க்கு உண்மைகளை எடுத்துச் சொல்லக்கூடியவனாகவும் எந்தக் காலத்தும் மேற்கொள்ளும் வினையின் தன்மையைப் பற்றி நன்கு தெரிந்தவனாகவும் உள்ள அமைச்சனைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதே அரசருக்கு நல்ல துணையாகும்.

**அமைச்சரது சிறப்பு**

06. மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை

**பதப்பிரிப்பு :** மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யா உள முன் நிற்பவை

பொருள் : நுண்ணறிவோடு நூலறிவும் பெற்ற அமைச்சருக்குப் புலப்படாத வேறு அறிவுள்ள செயல்கள் எவை இருக்கின்றன?

**அமைச்சரது செயல்**

07. **செயற்கை அறிந்தக் கடைத்து முலகத்**
**தியற்கை அறிந்து செயல்.**

**பதப்பிரிப்பு :** செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்.

**பொருள் :** நூலறிவோடு நுண்ணறிவாலும் செய்யவேண்டியது இன்னதுதான் என்று முடிவுசெய்த போதிலும் உலகத்தாருக்கு இது பொருந்துமா பொருந்தாதா என்பதை உணர்ந்து பொருந்துவனவற்றை அமைச்சன் செய்யவேண்டும்.

08. **அறிகொன் றறியான் எனினும் உறுதி**
**உழையிருந்தான் கூறல் கடன்.**

**பதப்பிரிப்பு :** அறிகொன்று அறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன்

பொருள் : எடுத்துக்கூறிய அறிவு மொழிகளை அரசன் ஏற்றுக்கொள்ள மறுத்து அதன் பயனை அறியாதவனாக இருப்பினும், அதற்காக மனம் சலியாது உண்மையைத் திறம்பட எடுத்துக்கூறுவதே உடனிருக்கும் அமைச்சனின் தலையாய் கடமையாகும்.

அமைச்சருள் நீங்கியாரது குற்றம்

09. பழுதெண்ணும் மந்திரியிற் பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி உறும்

பதப்பிரிப்பு : பழுது எண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ் ஓர்
எழுபது கோடி உறும்

பொருள் : தீமை எண்ணும்படியான அமைச்சன் ஒருவன் அரசன் பக்கத்தில் இருப்பான் என்றால் எழுபதுகோடி பகைவர்கள் இருப்பதிலும் கொடுமையாகும்.

10. முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்
திறப்பா டிலாஅ தவர்

பதப்பிரிப்பு : முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்
திறப்பாடு இலாஅ தவர்

பொருள் : செயல் செய்யும் திறமை இல்லாதவர் நீதிநெறிக்கேற்ப ஆராய்ந்தாலும் நற்பயனைத் தரும் செயல்களைச் செய்துமுடிக்க மாட்டார்கள்.

மூப்பில் இருந்தும் மரணத்தில் இருந்தும் விடுபடுமாறு என்னை வழிபட்டு முயற்சி செய்வோர் "அது" என்ற பிரம்மத்தை உணர்வார்; ஆத்ம ஞானம் முழுவதையும் உணர்வார்; செய்கை அனைத்தையும் உணர்வார். பூதஞானம், தேவஞானம், யாகஞானம் இவற்றுடன் என்னை எவர் இறுதிக்காலத்திலாயினும் அறிவாரோ யோகத்தில் பொருந்திய சித்தமுடைய அன்னோரே அறிஞர்.

- ஸ்ரீமத் பகவத்கீதை 7:29-30

# சொல் வன்மை

## அதிகார வைப்பு

அமைச்சன் தான் கருதிய செயல் நிறைவுபெறுவதற்காக தனக்குரிய அமைச்சினை நடாத்துவதற்கு பொருத்தமான சொற்களைச் சொல்வதில் உள்ள ஆற்றலே சொல்வன்மை ஆகும். அமைச்சருக்குச் சொல்வன்மை அவசியமானது கருதி இவ் அதிகாரம் அமைச்சுக்குப்பின் வைக்கப்பட்டது.

## சொல்வன்மையின் இன்றியமையாமை

01. நாநல மென்று நலனுடைமை அந்நலம்
யாநலத் துள்ளதூஉம் அன்று

**பதப்பிரிப்பு :** நாநலம் என்னும் நலன் உடைமை அந்நலம்
யாநலத்து உள்ளதூஉம் அன்று

**பொருள் :** நாவினால் பேசும் திறமையாகிய நலமே ஒருவனுக்கு நன்மை தரக்கூடிய உண்மைச் செல்வமாகும். அதனால் உண்டாகும் நன்மை வேறு பிற எந்தச் செல்வத்தாலும் உண்டாகக் கூடியதன்று.

02. ஆக்கமும் கேடும் அதனால் வருதலாற்
காத்தோம்பல் சொல்லிங்கட் சோர்வு

**பதப்பிரிப்பு :** ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்து ஓம்பல் சொல்லின்கண் சோர்வு

**பொருள் :** வளர்ச்சியும் தாழ்வும் நற்சொல், தீச்சொற்களால் வருவதால் சொல்லைப் பேசும்போது தன்னிடத்தே மறதியில்லாமல் தீச்சொல் வராமல் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

## சொல்லின் இலக்கணம்

03. கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்

**பதப்பிரிப்பு :** கேட்டார் பிணிக்கும் தகை அவாய் கேளாரும்
வேட்பு மொழிவது ஆம் சொல்

பொருள் : தான்பேசும்போது கேட்டுக்கொண்டிருப்போரைத் தன்பால் இழுக்கும் தன்மையுடையதாய், கேளாத பலரும் கேட்கவேண்டும் என்ற ஆசைகொள்ளக்கூடியதாய், பேசும் திறமையே சொல்வன்மையாகும்.

**சொல்லைச் சொல்லும் விதம்**

04. **திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்**
**பொருளும் அதனினூஉங் கில்**

பதப்பிரிப்பு : திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்
பொருளும் அதனின் ஊங்கு இல்

பொருள் : பேசும்போது தன்னுடைய தகுதிக்கும், கேட்போருடைய தகுதிக்கும் ஏற்றவாறு பேசவேண்டும். ஏனென்றால் உயர்ந்த தர்மத்தைச் செய்வதற்கும், பொருளைத் தேடுவதற்கும் அந்தச் சொல்லைவிட அரசனுக்குச் சிறந்த துணை வேறுஇல்லை.

05. **சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை**
**வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து**

பதப்பிரிப்பு : சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல் அச்சொல்லை
வெல்லும் சொல் இன்மை அறிந்து

பொருள் : தான் சொல்லிய சொல்லைவிட மேலான வேறொரு சொல் இல்லை என்பதை உணர்ந்து பிறகு அச்சொல்லைச் சொல்லுவாயாக.

06. **வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடல்**
**மாட்சியின் மாசற்றார் கோள்**

பதப்பிரிப்பு : வேட்பத் தாம் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்
மாட்சியின் மாசு அற்றார் கோள்

பொருள் : தாம் சொல்லும்போது பிறர் விரும்பும் முறையிலே சொல்லிப் பிறர் பேசுவதில் நல்ல பயனுள்ள சொல்லை மட்டும் கேட்பதுதான் தகுதி நிறைந்த, குற்றமில்லாத பெரியோரின் கொள்கையாகும்.

**சொல்லவல்லாரது சிறப்பு**

07. **சொல்லல்வல்லன் சோர்விலன் அஞ்சா னவனை**
**இகல்வெல்லல் யார்க்கும் அரிது**

**பதப்பிரிப்பு :** சொல்லல் வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல் வெல்லல் யார்க்கும் அரிது

**பொருள் :** தான் எண்ணியபடி பிறருக்குத் தெளிவாகச் சொல்லும் ஆற்றல் உடையவன், மறதியில்லாதவன் தன்னுடைய கருத்தை அஞ்சாமல் சொல்லக்கூடியவன் இப்படிப்பட்ட தன்மையுடையவனை எப்படிப்பட்டவரும் பகைமைகொண்டு வெல்லமுடியாது.

08. விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்

**பதப்பிரிப்பு :** விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்து இனிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்

**பொருள் :** சொல்லவேண்டிய பொருளை வரிசைப்படுத்தி, கேட்பார் மகிழும்படி உறுதியாகச் சொல்லவல்லவனாயின் உலகத்தார் அவனது சொல்கேட்டு அப்பொழுதே அதன்படி நடப்பர்.

**சொல்வன்மை அற்றவரின் இழிவு**

09. பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்றா தவர்

**பதப்பிரிப்பு :** பல சொல்லக் காமுறுவர் மன்ற மாசு அற்ற
சில சொல்லல் தேறாதவர்

**பொருள்** : குற்றமில்லாத சில சொற்களினால் பிறரைத் தெளிவுபடச் செய்யமுடியாதவர் திருப்பித் திருப்பிப் பல சொல் சொல்ல ஆசைப்படுபவர்.

10. **இணரூழ்த்து நாறா மலரனையர் கற்ற**
**துணர விரித்துரையா தார்**

பதப்பிரிப்பு : இணர் ஊழ்த்தும் நாறா மலர் அனையர் கற்றது
உணர விரித்து உரையாதார்.

**பொருள்** : தாம் கற்றுணர்ந்த அரியபொருளைத் தெளிவாக எடுத்துக்கூற முடியாதவர் கொத்தாக மலர்ந்திருக்கும் மலர்கள் வாசனையின்மையால் பிறருக்கு பயன்படாததைப் போல் ஆவார்.

அஞ்சியவர்க்குச் சதமரணம்
அஞ்சாத நெஞ்சத்து ஆடவர்க்கு
ஒரு மரணம்
அவனிமிசைப் பிறந்தோர்
துஞ்சுவர் என்றறிந்தும்
சாதலுக்கு நடுங்கும்
துன்மதி மூடரைக் கண்டால்
புன்னகை செய்பவன் யான்.

- ஷேக்ஸ்பியர்

யோகஞானம் என்பது என்ன?
தம்மைத் தாம் கட்டியவர்களால் மரண நேரத்திலும் இவ்வுலகத்தில்
நீ அறியப்படுவது எப்படி?

– ஸ்ரீமத் பகவத்கீதை 8:2

# வினைத் தூய்மை

## அதிகார வைப்பு

செய்யப்படும் செயல்கள் பொருள்அல்லாது அறமும் புகழும் தந்து நல்லன ஆகுதல் ஆகும். சொல் மட்டுமன்றி செய்யும் செயலும் நன்றாக இருக்கவேண்டும் என்பது கருதி இது சொல்வன்மையின் பின்னர் வைக்கப்பட்டது.

## வினைத்தூய்மையின் சிறப்பு

01. துணைநலம் ஆக்கந் தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாந் தரும்

பதப்பிரிப்பு : துணை நலம் ஆக்கம் தருஉம் வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும்

பொருள் : துணைவர்களால் உண்டாகக்கூடிய நன்மை ஒருவருக்கு வளர்ச்சியைக் கொடுக்கும். ஆனால் செயலானது பழுதில்லாமல் முடிவு பெற்றால் அதனால் எல்லா நன்மைகளும் உண்டாகும்.

## பாவமும் பழியும் வரும் செயலைச் செய்யாமை

02. என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றிய பயவா வினை

பதப்பிரிப்பு : என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை

பொருள் : வாழ்க்கையின் பயனாகிய புகழையும், அதன் இலட்சியமாகிய நன்மைகளையும் கொடுக்காத செயல்களைக் கண்டு எப்போதும் அதை விட்டு விலகவேண்டும்.

03. ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்குஞ் செய்வினை
ஆஅது மென்னு மவர்

பதப்பிரிப்பு : ஓஓதல் வேண்டும் ஒளி மாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னும் அவர்

பொருள் : வளர்ச்சி வேண்டும் என்று எண்ணுபவர் தம்முடைய புகழைக் குறைத்துவிடும் படியான செயல்களிலிருந்து விலகுதல் வேண்டும்.

04. இடுக்கண் படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்

பதப்பிரிப்பு : இடுக்கண் படினும் இளிவந்த செய்யார்
நடுக்கு அற்ற காட்சி அவர்

பொருள் : உறுதி உள்ளம் படைத்த பெரியோர் துன்பம் வந்த காலத்திலும் தாழ்வைத் தரக்கூடிய செயல் ஒன்றும் செய்யமாட்டார்.

05. எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றென்ன செய்யாமை நன்று

பதப்பிரிப்பு : எற்று என்று இரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்று அன்ன செய்யாமை நன்று

பொருள் : இதைச் செய்துவிட்டோமே என்று பின்னால் வருந்தக்கூடிய செயலைச் செய்யாதே. அப்படிச் செய்வாயானால் அந்தச் செயலை எண்ணி வருந்தாது மறுபடியும் அப்படிப்பட்ட செய்கையைச் செய்யாது விடுதல் நன்று.

06. ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை

பதப்பிரிப்பு : ஈன்றாள் பசி காண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை

பொருள் : உடலைப் பெற்று நன்றாக வளரப் பாடுபட்ட தாயார் பசித்திருப்பதைப் பார்த்தபோதிலும் ஆன்ம நலனுக்கு உழைக்கும் பெரியோர் பழியாக எண்ணும் செயலைச் செய்யாதே.

**பாவமும் பழியும் வரும் செயலைச் செய்யாமைக்கான காரணம்**

**07. பழிமலைந் தெய்திய ஆக்கத்திற் சான்றோர்**
**கழிநல் குரவே தலை**

**பதப்பிரிப்பு :** பழி மலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை

பொருள் : பழிக்குரிய செயலைச் செய்து அதனால் பெற்ற செல்வத்தைக் காட்டிலும் தன்னை மாத்திரம் துன்பத்திற்கு ஆளாக்கும் பெரிய வறுமையோடு இருப்பதே பெரியோர்க்குச் சிறந்தது.

**08. கடிந்த கடிந்தொரார் செய்தார்க் கவைதாம்**
**முடிந்தாலும் பீழை தரும்**

**பதப்பிரிப்பு :** கடிந்த கடிந்து ஓரார் செய்தார்க்கு அவைதாம்
முடிந்தாலும் பீழை தரும்

பொருள் : கண்டிக்கத் தக்க செயல்களைக் கண்டித்து விலக்காது, செயலை முடிப்பான் கருதி முடித்தாலும் அந்தச் செயல் இறுதியில் துன்பத்தையே கொடுக்கும்.

**09. அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்**
**பிற்பயக்கும் நற்பா லவை**

**பதப்பிரிப்பு :** அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பாலவை

பொருள் : பிறரைத் துன்பப்படுத்திப் பெற்ற பொருளெல்லாம் தன்னைத் துன்பப் படுத்திப் பின்னீங்கும். ஆனால் பிறருக்கு நன்மை

செய்வதனால் பொருளை இழந்தாலும் பின்னர் நல்ல பலனையே கொடுக்கும்.

10. **சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்**
**கலத்துணீர் பெய்திரீஇ யற்று**

**பதப்பிரிப்பு :** சலத்தால் பொருள் செய்து ஏமார்த்தல் பசுமட்
கலத்துள் நீர் பெய்து இரீயயற்று

**பொருள் :** தீமை செய்தலினால் பொருளையீட்டி அரசனைப் பாதுகாத்து விடுதல் பச்சை மண்ணாலான குடத்தில் நீரை நிரப்பி நிறுத்தி வைத்துவிடலாம் என்பதற்கு ஒப்பாகும்.

## இறப்பில் உயிர்ப்பு

அது இலையுதிர் காலம்.
மரம் மொட்டையாக நின்றது
புல்மேய்ந்த மாடுகள்
மரம் ஒன்றை இரக்கத்தோடு நோக்கின

'உன் இலைகள் விழுந்துகொண்டிருக்கின்றன
உன்னைப்பார்த்தால் அழவேண்டும் போல் இருக்கிறது'
என்று மாடு ஒன்று தழுதழுத்த குரலில் கூறியது.

அதற்கு 'நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை
புதிய தளிர்களுக்காக அவை விழத்தான் வேண்டும்'
என நிமிர்ந்து நின்ற மரம் சொன்னது.

# குறிப்பு அறிதல்

## அதிகார வைப்பு

அரசர் கருதிய கருத்தை அவர் கூறாமலேயே அமைச்சர் அறிவதாகும். இது மன்னரைச் சேர்ந்து ஒழுகுவதற்கு இன்றியமையாதது என்பதால் மன்னரைச் சேர்ந்து ஒழுகல் என்ற அதிகாரத்தின் பின் வைக்கப்பட்டது.

### குறிப்பு அறிவாரது சிறப்பு

01. கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்
மாறாநீர் வையக் கணி

பதப்பிரிப்பு : கூறாமை நோக்கி குறிப்பு அறிவான் எஞ்ஞான்றும்
மாறா நீர் வையக்கு அணி

பொருள் : அரசன் சொல்லாமலே அவன் முகம்நோக்கி அவன் எண்ணத்தை அறிந்து அதன்படி நடக்கும் அமைச்சன் தண்ணீரால் சூழப்பட்ட இந்த உலகத்திற்கு என்றும் ஓர் ஆபரணம் போல் இருப்பான்.

02. ஐயப்படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்

பதப்பிரிப்பு : ஐயப்படாஅது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தோடு ஒப்பக் கொளல்

பொருள் : சந்தேகமில்லாது அரசன் மனதிலே உள்ள எண்ணங்களை உறுதியாக அறிந்துகொள்ளும் அமைச்சனைத் தெய்வத்திற்குச் சமமாக எண்ணவேண்டும்.

03. குறிப்பிற் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல்

பதப்பிரிப்பு : குறிப்பின் குறிப்பு உணர்வாரை உறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல்

**பொருள் :** அரசனது மனதிலுள்ள எண்ணங்களைச் சந்தேகமறக் குறிப்பால் அறிந்துகொள்ளும் அமைச்சரை அரசனுக்கு உள்ள ஆறு அங்கங்களில் எதைக் கொடுத்தாகிலும் அடைந்துகொள்ள வேண்டும்.

## குறிப்பு அறியாரின் இழிவு

04. குறித்ததது கூறாமைக் கொள்வாரோ டேனை
உறுப்பொ ரனையரால் வேறு

**பதப்பிரிப்பு :** குறித்தது கூறாமை கொள்வாரோடு ஏனை
உறுப்பு ஓரனையரால் வேறு

**பொருள் :** எண்ணியதைச் சொல்லாமலே குறிப்பால் அறிந்து கொள்வாரோடு அறிந்து கொள்ளாதவர் அவயவங்களினால் மனிதவடிவைப் பெற்றிருந்த போதிலும் அறிவினால் வேறு ஆவர்.

05. குறிப்பிற் குறிப்புணரா வாயின் உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண்

**பதப்பிரிப்பு :** குறிப்பின் குறிப்பு உணரா ஆயின் உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண்

**பொருள் :** எண்ணத்திலுள்ளதை முகத்தின் குறிப்பினால் தெரிந்துகொள்ள முடியவில்லை என்றால் மனித உறுப்புக்களில் சிறந்ததாகிய கண்ணைப் பெற்றிருந்தும் அதனாலாகிய பயன் என்ன?

## குறிப்பு அறிவதற்குக் கருவி முகமாகும்

06. அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்

**பதப்பிரிப்பு :** அடுத்தது காட்டும் பழிங்கு போல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்

பொருள் : தன்னிடத்தே சார்ந்துள்ள பொருளைக் காட்டும் கண்ணாடிபோல மனதிலேஉள்ள எண்ணத்தை முகமானது காட்டும்.

07. **முகத்தின் முதுக்குறைந்த துண்டோ உவப்பினும்**
**காயினும் தான்முந் துறும்**

பதப்பிரிப்பு : முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ உவப்பினும்
காயினும் தான் முந்துறும்

பொருள் : மகிழ்ச்சியையும் துன்பத்தையும் முகமானது முன்னேசென்று வெளிப்படுத்துவதுபோல் அனுபவத்தினால் உண்மையை வெளிப்படுத்தும் சிறந்த கருவி வேறொன்றுமில்லை.

08. **முகநோக்கி நிற்க அமையும் அகநோக்கி**
**உற்ற துணர்வார்ப் பெறின்**

பதப்பிரிப்பு : முகம் நோக்கி நிற்க அமையும் அகம் நோக்கி
உற்றது உணர்வார் பெறின்

பொருள் : மனத்தில் நிகழும் எண்ணங்களைக் குறிப்பால் உணரும் ஆற்றலைப் பெற்றவர் உளராயின் அவருக்கு முகம்நோக்கி நின்றாலே உள்ள நிகழ்ச்சிகளை அறிந்துவிடலாம்.

**கண்ணால் குறிப்பு அறியும் நுண்கருவி நோக்கு**

09. **பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்ணின்**
**வகைமை உணர்வார்ப் பெறின்**

பதப்பிரிப்பு : பகைமையும் கேண்மையும் கண் உரைக்கும் கண்ணின்
வகைமை உணர்வார்ப் பெறின்

பொருள் : கண்ணைப் பார்க்கும் விதங்கள் தெரிந்துவிடுமானால் பகைமை எண்ணத்தோடு இருப்பதும், நட்பு எண்ணத்தோடு இருப்பதும் கண்களால் தெரிந்துகொள்ள முடியும்.

10. நுண்ணியம் என்பார் அளக்குங்கோல் காணுங்கால்
கண்ணல்ல தில்லை பிற

பதப்பிரிப்பு : நுண்ணியம் என்பார் அளக்கும் கோல் காணுங்கால்
கண் அல்லது இல்லைப் பிற

பொருள் : நுட்பமான அறிவை உடையவர் பிறரை அறிந்துகொள்வதற்குச் சாதகமாக உள்ள அறிகருவி கண்ணைத்தவிர வேறொன்றுமில்லை என்பார்.

## உயிர்

உயிரே, நினது பெருமை யாருக்குத் தெரியும்
நீ கண்கண்ட தெய்வம்
எல்லா விதிகளும் நின்னால் அமைவன
எல்லா விதிகளும் நின்னால் அழிவன
உயிரே,
நீ காற்று, நீ தீ, நீ நிலம், நீ நீர், நீ வானம்.
தோன்றும் பொருள்களின் தோற்றநெறி நீ
மாறுவனவற்றை மாற்றுவிப்பது நின்தொழில்
பறக்கின்ற பூச்சி, கொல்லுகின்ற புலி, ஊர்கின்ற புழு
இந்தப் பூமியிலுள்ள எண்ணற்ற உயிர்கள்
எண்ணற்ற உலகங்களிலுள்ள எண்ணே இல்லாத உயிர்த்தொகைகள்
இவையெல்லாம் நினது விளக்கம்
மண்ணிலும் நீரிலும் காற்றிலும் நிரம்பிக்கிடக்கும்
-உயிர்களைக் கருதுகின்றோம்
காற்றிலே ஒரு சதுரஅடி வரம்பில் லக்ஷக்கணக்கான சிறிய ஜந்துக்கள்
நமது கண்ணுக்குத் தெரியாமல் வாழ்கின்றன.
ஒரு பெரிய ஜந்து அதனுடலுக்குள் பல சிறிய ஜந்துக்கள்
அவற்றுள் அவற்றிலுஞ் சிறிய பல ஜந்துக்கள்
அவற்றுள் இன்னுஞ் சிறியவை இங்ஙனம் இவ்வையகம் முழுவதிலும்
உயிர்களைப் பொதிந்து வைத்திருக்கிறது. - பாரதியார் -

# அவையறிதல்

## அதிகார வைப்பு

அரசனோடு இருக்கும் அவையினது இயல்பினை அறிதலே அவையறிதல் ஆகும். அதாவது ஒரு காரியத்தைச் சொல்லும்போது அரசனுடைய குறிப்பை அறிதல் மட்டுமன்றி அரசன் இருக்கின்ற சபையினையும் அறிதல் அவசியமாகும். இதனால் இது குறிப்பறிதல் என்ற அதிகாரத்தின் பின்னர் வைக்கப்பட்டது.

## சொல்லும்போது அவையறிந்தே சொல்ல வேண்டும்

01. அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்.

பதப்பிரிப்பு : அவை அறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகை அறிந்த தூய்மையவர்

பொருள் : பலவேறு கருத்துக்களைக் கொடுக்கக்கூடிய சொல்லின் திறன்களை நன்குணர்ந்த பெரியோர்கள் பலதரப்பட்ட நிலையில் உள்ளவர்கள் கூடிய அவையினை அறிந்து அவர் எண்ணங்களுக்கு ஏற்றவாறு ஆராய்ந்து சொல்ல வேண்டும்.

02. இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர்

பதப்பிரிப்பு : இடைதெரிந்து நன்கு உணர்ந்து சொல்லுக சொல்லின்
நடை தெரிந்த நன்மையவர்

பொருள் : சொல்லின் தன்மையை அறிந்து, அதைப் பயன்படச்செய்பவர் பேசும்போது அவையின் நிலையையும், சந்தர்ப்பத்தையும் அறிந்து அதற்கு ஏற்றவாறு பேசவேண்டும்.

## அவையறியாமையால் வரும் குற்றம்

03. அவையறியார் சொல்லற்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூம் இல்

பதப்பிரிப்பு : அவை அறியார் சொல்லல் மேற்கொள்பவர் சொல்லின் வகை அறியார் வல்லதும் இல்

பொருள் : சபையோரின் நிலைமையை அறியாது சொல்லிக்கொண்டிருப்பவர் சொல்லின் திறமையை அறியாதவர் ஆவார். மேலும் அது பேச்சுத்திறமையும் ஆகாது.

**அவையின் தன்மையை அறிந்தார் செய்யும் திறன்**

04. **ஒளியார்முன் ஒள்ளிய ராதல் வெளியார்முன்**
**வான்சுதை வண்ணங் கொளல்**

பதப்பிரிப்பு : ஒளியார் முன் ஒள்ளியர் ஆதல் வெளியார் மன் வான்சுதை வண்ணம் கொள்ளல்

பொருள் : ஒளியுடைய அறிவைப் பெற்றவர்கள் முன்னிலையில் அவர்களுக்கு மேலான அறிவை வெளிப்படுத்தி விடுவாயாக. அறிவு என்னும் உள்ளீடு இல்லாத வெள்ளையான மக்களிடையே சிறந்த வெண்மை நிறத்தைக் கொண்ட சுண்ணாம்பு போல மிக வெள்ளையாகப் பழகுவாயாக.

**அவையின் தன்மையை நன்கு அறிந்தார் அவையில் செய்யும் திறன்**

05. நன்றென் றவற்றுள்ளும் நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு

பதப்பிரிப்பு : நன்று என்றவற்றுள்ளும் நன்றே முதுவருள் முந்து கிளவாச் செறிவு

பொருள் : அறிவும் அனுபவமும் உடைய பெரியோர் நிறைந்த சபையிலே பேச்சின் திறனைக் காட்ட முற்படாது அடக்கமாக இருத்தல் நன்மை பயக்க கூடியவை என்று சொல்லக்கூடியனவற்றுள் எல்லாம் மிகநன்று.

**அவை அறிதலில் வழுவும்போது வரும் குற்றம்**

06. ஆற்றின் நிலைதளர்ந் தற்றே வியன்புலம்
ஏற்றுணர்வார் முன்னர் இழுக்கு

**பதப்பிரிப்பு :** ஆற்றின் நிலை தளர்ந்தற்றே வியன்புலம்
ஏற்று உணர்வார் முன்னர் இழுக்கு

**பொருள் :** பரந்த அறிவைக் கொடுக்கக்கூடிய உயர்ந்த நூல்களை நன்கு ஆராய்ந்து உணர்ந்தவர்களுக்கு முன்னே, திறம்படப் பேசாதவன் ஆற்றிலே ஆழந்தெரியாமல் நிலைதவறிவிடுபவனுக்கு ஒப்பாவான்.

**தகுதியான அவையை அறிந்த தகுதியுடையோர் சபையில் எவ்வகையினும் சொல்லமுடியும்**

07. கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்
சொற்றெறிதல் வல்லார் அகத்து

**பதப்பிரிப்பு :** கற்ற அறிந்தார் கல்வி விளங்கும் கசடு அறச்
சொல் தெரிதல் வல்லார் அகத்து

**பொருள் :** குற்றமில்லாது கல்விபயின்ற அறிஞர்களது அவையிலே பேசினால் கற்றறிந்தவர்களின் கல்வி அறிவு நன்றாக விளக்கமடையும்.

08. உணர்வ துடையார் முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந் தற்று

**பதப்பிரிப்பு :** உணர்வது உடையார்முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர் சொரிந்தற்று

**பொருள் :** பிறர் சொல்லக்கூடிய பொருள்களை நன்றாக உணர்ந்து அனுபவிக்க வல்லார் நடுவே பேசுவது வளர்கின்ற நன்செய்க் கழனிகளிலே தண்ணீர் பாய்ச்சுவது போலாகும்.

தகுதியால் தாழ்ந்தவர்கள் அவையிலே எந்தவிதத்திலும் சொல்லக்கூடாது

09. புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க நல்லவையுள்
நன்கு செலச்சொல்லு வார்

பதப்பிரிப்பு : புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க நல்லவையுள்
நன்கு செச் சொல்லுவார்

பொருள் : நல்ல அறிஞர்கள் கூடியுள்ள சபையிலே அவர்களும் இன்பமாகக் கேட்கும்படி பேசும் திறமுடைய கல்வி அறிவு பெற்றவர் அற்பர்கள் கூடியிருக்கும் சபையிலே மறந்தும் பேசாது ஒழிவார்களாக.

10. அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தங்கணத்தர்
அல்லார்முன் கோட்டி கொளல்

பதப்பிரிப்பு : அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தம் கணத்தார்
அல்லார்முன் கோட்டி கொளல்

பொருள் : தம்மோடு ஒத்த அறிவில்லாரின் நடுவே பேசுவது சாக்கடையிலே விழுந்த அமிர்தம்போல் பயன்படாது.

## குழந்தைகளைப் போல வாழுங்கள்

'குழந்தைகளைப் போலாய் விடுங்கள்' என்றால் உங்களுடைய லௌகிக அனுபவங்களை எல்லாம் மறந்து விடுங்கள். நீங்கள் படித்த படிப்பையெல்லாம் இழந்து விடுங்கள்; மறுபடி சிசுக்களைப் போலே தாய்ப்பால் குடிக்கவும், மழலைச் சொற்கள் பேசவும் தொடங்குங்கள் என்பது கொள்கையன்று. இருதயத்தைக் குழந்தைகளின் இருதயம்போல நிஷ்களங்கமாகவும், சுத்தமாகவும் வைத்துக்கொள்ளுங்கள் என்பது கருத்து.

- பாரதியார் -

# அவை அஞ்சாமை

## அதிகார வைப்பு

அவை அஞ்சாமை என்பது சொல்லுவதற்குரிய அவையினை அறிந்து சொல்லும்போது அதற்கு அஞ்சாமை ஆகும். இதனால் அவை அறிதல் என்ற அதிகாரத்தின்பின்னர் இது வைக்கப்பட்டது.

## அவை அஞ்சாரின் சிறப்பு

01. வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்

**பதப்பிரிப்பு :** வகை அறிந்து வல்லவை வாய் சோரார் சொல்லின்
தொகை அறிந்த தூய்மை அவர்

**பொருள் :** கற்றுவல்ல சபை, கற்காத சபை என்னும் சபையின் வகையினை அறிந்த மனத்தூய்மையோர் கற்றுவல்லார் கூடிய அவையிலே அவையின் வகையறிந்து பேசுவதில் ஒரு சிறிதும் தளர்ச்சியடைய மாட்டார்கள்.

02. கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார்

**பதப்பிரிப்பு :** கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச் சொல்லுவார்

**பொருள் :** நன்றாகப் படித்த நூலறிவு உடையோரும் கேட்டு அனுபவிக்குமாறு தாம் படித்தவைகளை அழகுபடச் சொல்வோர் படித்தவர்களிலே சிறப்பாகப் படித்தவர் என்று சொல்லப்படுவார்.

03. பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
அவையகத் தஞ்சா தவர்

**பதப்பிரிப்பு :** பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
அவையகத்து அஞ்சாதவர்

பொருள் : வெற்றி கருதிப் போர்க்களத்திலே சென்று உயிர் துறப்பவர் உலகத்திலே எளிமையாகப் பலர் இருப்பார்கள். ஆனால் சபைநடுவே சென்று தைரியமாகப் பேசி வெற்றி பெறுபவர் சிலர்தான் இருப்பார்கள்.

**அவை அஞ்சாதவரின் பயன்**

04. கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற
மிக்காருள் மிக்க கொளல்

பதப்பிரிப்பு : கற்றார் முன் கற்ற செலச் சொல்லித் தாம் கற்ற
மிக்ககாருள் மிக்க கொளல்

பொருள் : அறிஞர்கள் முன்னிலையில் தான் கற்றவற்றை அவர்கள் இரசித்து அனுபவிக்கும் வண்ணம் சொல்லித் தன்னின் மிக்க அறிஞர்களிடம் தனக்குத் தெரியாத நுட்பப்பொருட்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

**அவை அஞ்சாமையின் காரணம்**

05. ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு

பதப்பிரிப்பு : ஆற்றின் அளவு அறிந்து கற்க அவை அஞ்சா
மாற்றம் கொடுத்தற் பொருட்டு

பொருள் : சபையிலே அஞ்சாது வாதம்செய்யும் பொருட்டுக் கற்கவேண்டிய வழிகளிலே நின்று அளவை நூல்களைக் கற்றுத் தெரிந்து கொள்வாயாக.

**அவை அஞ்சுவாரது இழிவு**

06. வாளொடென் வன்கண்ண ரல்லார்க்கு நூலொடென்
நுண்ணவை அஞ்சு பவர்க்கு

பதப்பிரிப்பு : வாளொடு என் வன் கண்ணர் அல்லார்க்கு நூலொடு என்
நுண்அவை அஞ்சுபவர்க்கு

**பொருள் :** வீரம் இல்லாத மனிதனுக்கு வாளோடு என்ன தொடர்பு? அதுபோல அறிஞர்கள் கூடிய சபையிலே பேச அஞ்சுபவனுக்கு நூலோடு என்ன தொடர்பு. தொடர்பினால் பயனில்லை.

07. **பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்**
**தஞ்சு மவன்கற்ற நூல்**

**பதப்பிரிப்பு :** பகையகத்துப் பேடி கை ஒள்வாள் அவையகத்து
அஞ்சுமவன் கற்ற நூல்

**பொருள் :** சபைநடுவே நின்று பேசுவதற்கு அஞ்சுபவன் படித்த நூலானது படைக்களத்திலே நின்று வீரமில்லாத பேடி கையிலேந்திய கூரிய வாளுக்கு ஒப்பாகும்.

08. **பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்**
**நன்கு செலச்சொல்லா தார்**

**பதப்பிரிப்பு :** பல்லவை கற்றும் பயம் இலரே நல்லவையுள்
நன்கு செலச் சொல்லாதார்

**பொருள் :** நல்ல அறிஞர்கள் கூடியுள்ள சபையிலே நல்ல அரிய பொருள்களை பிறர் அறியும் வண்ணம் திறம்படச் சொல்லும் ஆற்றல் இல்லாதவர் பல உயர்ந்த நூல்களைக் கற்றும் பயனடையமாட்டார்.

09. **கல்லா தவரிற் கடையென்ப கற்றறிந்தும்**
**நல்லா ரவையஞ்சு வார்**

**பதப்பிரிப்பு :** கல்லாதவரின் கடை என்ப கற்று அறிந்தும்
நல்லார் அவை அஞ்சுவார்

**பொருள் :** உயர்ந்த நூல்களை நன்கு கற்று அந்த உண்மைகளை உணர்ந்திருந்தபோதும் நல்லவர்கள் சபையிலே பேச அஞ்சுபவர் கல்வியறிவே இல்லாதவர்களைவிட மிகத் தாழ்ந்தவர்கள் ஆவார்.

10. உளர் ரெனினும் இல்லாரொ டொப்பர் களனஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார்

**பதப்பிரிப்பு :** உளர் எனினும் இல்லாரொடு ஒப்பர் களன் அஞ்சிக்
கற்ற செலச்சொல்லாதார்

**பொருள் :** சபையைக்கண்டு அஞ்சித் தாம்கற்ற நுண்ணிய பொருள்களைப் பிறருக்குத் தெளிவாகச் சொல்ல முடியாதவர் செல்வத்தைப் பெற்றும் இல்லாத ஏழை மகனுக்கு ஒப்பாவர்.

- அங்கவியல் முற்றிற்று -

## திருக்குறட் சிறப்பு

மும்மலையும் முந்நாடும் முந்நதியும் முப்பதியும்
மும்முரசும் முத்தமிழும் முக்கொடியம் - மும்மாவும்
தாமுடைய மன்னர் தடமுடிமேல் தார்அன்றோ
பாமுறைதேர் வள்ளுவர்முப் பால்?

- சீத்தலைச் சாத்தனார்

பாயிரம் நான்கு;இல் அறம்இருபான்; பன்மூன்றே
தூய தறவறம்;ஒன்று ஊழாக - ஆய
அறத்துப்பால் நால்வகையா ஆய்ந்துஉரைத்தார் நூலின்
திறத்துப்பால் வள்ளுவனார் தேர்ந்து.

- எறிச்சலூர் மலாடனார்

எல்லாப் பொருளும் இதன்பால் உள;இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்; - சொல்லால்
பரந்தபா வால்என் பயன்?வள் ளுவனார்
சுரந்தபா வையத் துணை.

- மதுரைத் தமிழ் நாகனார்

அணுவைத் துளைத்துஏழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்.

- ஔவையார்

# ரெண்டும் கெட்டான்

சுத்திக்கொண்டிருக்கு
காலச் சில்லு.
கிண்டியெடுக்கேலாம
கொட்டிக் கொட்டி
நச்சுப் பாக்கேலாம
புதைச்சு வைச்ச காலத்துக்குள்ள
புதைஞ்சுபோன காலத்திலயிருந்து
சுத்திக்கொண்டிருக்கு.
ஓயாம.... அலுக்காம....
சுத்துறான் காலதேவன்.
பெரிய சுத்தல்காரன்.
சிறிசிலிருந்து பெரிசுவரை
சில்லுக்குள்ள சிக்குப்பட்டுச்
தேஞ்சு தேஞ்சு சுத்துது.
சில்லுக்குள்ளயும்
ஒண்டா கனக்க
ஒரு கண்டசீராப்
பிரிஞ்சுபோய்க் கிடக்குது.
காலம்
எண்ணிப் பாக்க வெளிக்கிட்டால்
கணித மண்டைக்கு ஏலாது
மூச்சு வாங்கும். முடியாது.
சில்லு
அவையவையின்ர
வழியிலைதான் ஓடும்
எண்டு நினைக்கிறவைக்குச்
சில்லுக்குள்ளதான் பாதை.
ஒருவழிக்கும் போகேலாத
சுத்தி சுத்தி
சுப்பற்ற கொல்லைக்குள்ள
போறபாதை.
இங்கை இதை விளங்காதவை
கனபேர்.
சின்னப் பயணம், பெரிய பயணம்
எண்டு சுத்தி சுத்தித் திரியினம்.
எல்லாத்துக்கும் காலம் வரேக்க
டக்கெண்டு இருந்தபாட்டில
சிலது சாகும்.
சிலது சேடமிழுத்துச் சாகும்.
காலம் பாக்கினம் மணிக்கூட்டில
மணிக்கூட்டுக்கும் காலம் வந்தா...?
செத்துப்போகும்.
மணிக்கூடு சாகாட்டி
பற்றிதான் அடிக்கடி சாகும்.
எப்படியெண்டாலும்
கடைசியில மணிக்கூடு சாகுமாம்.
சில்லுக்கு வெளியால
ஒருவழியும் இல்லை.
பெரிய வெட்டை.
சட்டையக் கழட்டிப்போட்டுத்தான்
போகவேணும்.
ஆருங் கேக்கமாட்டினம்.
எந்தச் சட்டையும் போடக்கூடாது.
போட்டா 'சேட்டை விர்றான்'
எண்டு பிடிச்சு
திருப்பயும் சில்லுக்குள்ள போட்டுச்
சுத்துவாங்கள்.
சட்டையக் கழட்டிப் போட்டா வெட்டை
வெளிக்கிட்டுப் போகாமலே
நிண்ட இடத்தில
பயணம் முடிஞ்சுபோம்.
சட்டையைக் கழட்டினாப்பிறகு
ரெண்டு சாமான் கெடவேணும்.
சிவனும் கெடவேணும்
சீவனும் கெடவேணும்
'அவன்' தான்
ரெண்டுங் கெட்டான்.
"அத்வைதி"

**நட்சத்திரப்பிட்டிச் சித்தர்**
**(புருஷோத்தமஞானியின் சீடர்)**

# சிவசம்புப்புலவர் சரித்திரம்

சுன்னாகம்
கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை, B.A.
நிகழ்த்திய வானொலிச் சொற்பொழிவு
(30.09.1964)



# சிவசம்புப் புலவர் சரித்திரம்

## அறிமுகக் குறிப்பு

உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரும்புலவர். ஈழத்திலும், தமிழகத்திலும் தன் தமிழ்ப் புமையால் நன்கறியப்பட்டவர். ஒட்டுமொத்தமான தமிழிலக்கிய உலகில் அதிகப்படியான பிரபந்தங்களைப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பாடியவர் என்ற பெருமைக்குரியவர். ஈழத்தில் சிவசம்புப்புலவர் மாணவர் பரம்பரை, ஆறுமுகநாவலர் மாணவர் பரம்பரை என்று இரு மாணவர் பரம்பரை மட்டுமே உள்ளது. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, நமது புலவரின் பரம்பரையில் வந்தவர். ஆறுமுக நாவலருக்கோ கவியியற்றும் வல்லமை இல்லை. புலவருக்கோ அது அதிகமாக உள்ளது. இவருடைய நூல்களும், இவரைப் பற்றிய ஆய்வுகளும் இன்று கிடைத்தற்கரியனவாய் உள்ளன. இவருடைய நூல்கள் பல அச்சேறியுள்ளன. குமாரசுவாமிப் புலவரின் மகனாகிய கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை 30.09.1964 அன்று வானொலியில் நிகழ்த்திய 'சிவசம்புப் புவலர் சரித்திரம் என்ற தலைப்பில் அமைந்த சொற்பொழிவு இன்று கிடைத்தற்கரியதாயிற்று. ஆகையினால் யாவரும் படித்துப் பயன்பெறும் வகையிலும், கல்வியுலகின் நன்மை கருதியும் இச்சொற்பொழிவு இங்கு தரப்படுகிறது.

# சிவசம்புப்புலவர் சரித்திரம்

(1829 - 1910)

## முகவுரை

சிவபூமி என்று திருமூலரால் விதந்தோதப்பெற்ற இவ் ஈழநாட்டில் தோன்றிய எண்ணிறந்த புலவர்களுள்ளே பொன்னெழுத்தாற் பொறிக்கப்படத்தக்க பேரும் புகழும் ஒருங்குபடைத்த பெரும்புலவர் சிவசம்புப் புலவர் ஆவர். திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளைக்குப் பின் பல்வகைப் பிரபந்தம் செய்யும் பெருவலியுடைய பெரும்புலவர் அவரே என்று கூறுதல் மிகையாகாது. பிறநாட்டு நாகரிக இருள்சூழ்ந்த அந்தக் காலத்தில் ஓர் இளஞாயிறெனத் தோன்றி இலக்கிய ஒளி வீசிச் செவ்விய மதுரம் சேர்ந்த தீந்தமிழில் சொன்னயமும், பொருணயமும் அமைந்த மூவாயிரத்துக்கு மேற்பட்ட பாக்களால் அறுபதுக்குக் குறையாத சிறந்த பிரபந்தங்கள் இயற்றித் தமிழன்னையின் நலிவையும், மெலிவையுந் தீர்த்து வளம்படுத்திய பெருமை அப்புலவருக்கே உரியது. நுண்மான் நுழைபுலமிக்க அன்னாரின் வாழ்க்கை வரலாற்றைத் தமிழ்கூறு நல்லுலகம் அறிதல் அவசியமாகும்.

சிவசம்புப் புலவரைப் பற்றி ஒரு சரித்திரம் தானும் இதுவரை வெளிவரவில்லை. அன்னார் சரித்திரத்தை வரன்முறையாகக் கூற வல்லுனரும் அருகிப்போகினர். புலவர் இயற்றிய நூல்கள் எல்லாம் அடங்கிய பிரபந்தத் திரட்டும் வெளிவரவில்லை. அவர் இயற்றிய உரைநூல்களும் அச்சுவாகனம் ஏறவில்லை. அச்சிடப்பட்ட சிலவும் கிடைக்காது மறைந்துவிட்டன. இந்நிலையில் அவருடைய சரித்திரத்தை முறைப்படுத்திக் கூறுதல் இலகுவானதொன்றன்று.

## பிறப்பும் கல்வியும்

சிவசம்புப்புலவர் சீரமர் இலங்கைச் சிரமென விளங்கும் யாழ்பாணத்து உடுப்பிட்டி என்னும் கிராமத்தில் பெரும் பிரபுவாக விளங்கிய அருளம்பல முதலியாருக்கும் காதிராசி அம்மையாருக்கும் புத்திரராக 1829ம் ஆண்டு அவதரித்தார். அவர் ஆரம்பக்கல்வி கற்கின்ற காலத்திலேயே சிறந்த ஞாபகசக்தியும் நுண்ணறிவும் பெரிதும் உடையவராகக் காணப்பட்டார்.

இயற்கையாகக் கல்வி கற்பதில் பெருவிருப்புடைய அவர் இருபாலை சேனாதிராய முதலியாருடைய மாணாக்கராகிய சரவணமுத்துப் புலவரிடத்தும், அவர் மாணாக்கராகிய சம்பந்தப் புலவரிடத்தும் 10 வருட காலம் பாரம், இராமாயணம், கந்தபுராணம், இரகுவம்சம் முதலிய இலக்கியங்களையும், தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களையும், சைவசித்தாந்த சாஸ்திரங்களையும், நியாய சாஸ்திரங்களையும் ஐயந்திரிபறக் கற்றனர். அவர் மாணாக்கராக இருக்கும் காலத்திலேயே பாக்கள் இயற்றும் வன்மையையும் பெற்றிருந்தனர். அவரது பாவன்மையை அறிந்த அவரது ஆசிரியர்கள் அவரிடத்துப் பெருமதிப்பும் அன்பும் காட்டி வந்தனர். அவர் தமது ஆசிரியர்களிடத்துக் கற்ற நூல்களோடு அமையாது மேலும் மேலும் பல்வகை நூல்களைத் தேடிக்கற்றுத் தமது கல்விவளத்தை மேம்படச்செய்வதில் கண்ணுங் கருத்துமுடையவராய் இருந்தார்.

## ஆறுமுகநாவலர் புலவர் பட்டம் வழங்கியது

சரவணமுத்துப் புலவரிடம் கற்கின்ற காலத்திலேயே புலவரும் நாவலரும் சிறந்த நண்பர்களாகினர். நாவலர் தம்மிலும் ஏழு வயது குறைந்தவராகிய புலவரது விவேகத்தையும் புலமையையும் நன்கறிந்து தாம் செய்யும் பிரசங்கங்களுக்கு அழைத்துச் சென்றனர். ஒவ்வொரு பிரசங்க முடிவிலும் பிரசங்கத்தின் சாரத்தைச் சிறந்த பாக்களில் அமைத்து அவற்றைச் சபையில் வாசிப்பது புலவருக்கு வழக்கமாயிருந்தது. கடுமழை பொழியும் ஒருநாள் புலோலியில் நடந்த கூட்டமொன்றில் நாவலர் செய்த பிரசங்க சாரத்தை உணர்ச்சி ததும்பும் பாக்களிற் பாடினர். அச்சமயம் விடாது பெய்துகொண்டிருந்த மழையைக் குறிப்பிட்ட பாட்டுப்பகுதி வந்ததும் சபையோர் ஆனந்தத்தில் மூழ்கி ஆரவாரித்தனர்.

அப்பாட்டுப் பின்வருமாறு :

அன்பர்கண் ணீர்மழை யும்சிவ னார்மெய் யருள்மழையும்
மன்பிர பந்த மழையும் பிரசங்க மாமழையும்
கொன்புனை நீலப் புயலின் மழையும் கொடைமழையும்
இன்பொடு மல்கப் புலோலிமெய் வாழ்வினி லேறியதே.

மிக்க மகிழ்ச்சி எய்தினவராகிய நாவலரும் சபையில் எழுந்து புலவரை நோக்கி "கம்பனுக்குப் பின்னொரு சம்பனல்லோ" என்று கூறி

அவருக்குப் புலவர் என்னும் பட்டத்தை அளித்தனர். அன்று தொடக்கம் அவரை எல்லோரும் புலவர் என்று அழைப்பாராயினர்.

புலவர் எட்டிகுடிக்கு தலயாத்திரையாகப் போனபோது எட்டிகுடிப் பிரபந்தம் எனும் நூலைப்பாடி ஒரு பேரவையில் அரங்கேற்றியபோதும் ஆங்கு அவருக்குப் புலவர் பட்டம் அளிக்கப்பட்டதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

புலவர் நாவலர் மாட்டுப் பேரன்பு பூண்டவர் என்பதை அவர் நாவலர் பேரிற் பாடிய சரமகவிப்பாட்டு நன்கு புலப்படுத்தும். பாட்டு வருமாறு:

**ஆரூர னில்லைப் புகலியர் கோனில்லை அப்பனில்லை**
**சீரூரு மாணிக்க வாசக நில்லைத் திசையளந்த**
**பேரூரு மாறு முகநா வலனில்லைப் பின்னிங்கியார்**
**நீருறும் வேணியன் மார்க்கத்தைப் போதிக்கு நீர்மையரே.**

எல்லா அழகும் குதிகொண்டாடும் இப்பாட்டின் சுவையை மாந்தி மாந்திச் சொக்கிப்போன செந்தமிழ் வள்ளலாகிய றாவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை புலவருக்கு அனுப்பிய பாராட்டுப் பாட்டுப் பின்வருமாறு:

**ஆரூர னில்லையென் காரிகை யாலிவ் வவனிதொழப்**
**பேரூரு மாறு முகநா வலர்பெரு மான்பெருமை**
**சீரூரு மாறு தெரித்தாய் சிவசம்புத் தேசிகநிற்**
**காரூரி நேரின்றன் றோநின்சொல் வன்மை யறிந்தனனே.**

இதுவே புலவரது கவித்துவத்தின் மகிமையை நன்கு விளக்குஞ் சிறந்த சான்றாகும்.

## இயற்றிய நூல்கள்

சிவசம்புப்புலவர் இளமைக் காலந்தொட்டுப் பாக்கள் இயற்றும்வன்மையைப் பெற்றிருந்தார். அவர் சுப்பிரமணியப் பெருமானின் வரப்பிரசாதம் பெற்று அல்லும்பகலுங் கவிமாரி பொழிந்த வண்ணமே இருந்தார். பாக்கள் மனத்தின் கண்ணே தோன்றத் தோன்ற அவர் அவற்றை ஏட்டில் எழுதிய வண்ணமாகவே இருப்பார். நால்வகைக் கவிபாடுவதில்

அவருக் கிணையாவார் ஒருவரும் அக்காலத்தில் இல்லை எனலாம். அவர் யமகவந்தாதி, பதிகங்கள், மாலைகள், ஊஞ்சல்கள் முதலிய அளவிறந்த பிரபந்தங்களைப் பாடி; பெருமையடைந்தார். அவைகளுள் சிறந்தன பாஸ்கர சேதுபதி நான்மணிமாலை, பாஸ்கர சேதுபதி கல்லாடசாரக் கலித்துறை, பாண்டித்துரைத் தேவர் நான்மணிமாலை, கந்தவனநாதர் பதிகம், கந்தவனநாதர் கீர்த்தனை, கந்தவனநாதர் நான்மணிமாலை, வல்லிபுரநாதர் பதிகம், செந்தில் யமகவந்தாதி, திருவேரக யமகவந்தாதி, புலோலி நான்மணிமாலை, மயில்வாகன வம்சவைபவம், பருத்தித்துறைக் கலித்துறை, எட்டிக்குடிப் பிரபந்தம் முதலியன.

புலவரியற்றிய கதிர்காம வெண்பா, கண்டிக்கதிரேசன் பதிகம், மறைசை நான்மணிமாலை, திரிகோணமலை வில்லூன்றி நான்மணிமாலை முதலிய பதினைந்துக்கு மேற்பட்ட நூல்கள் இப்போது இருக்குமிடம் தெரியாமல் மறைந்து போயின.

புலவர் ஏறக்குறைய பதினைந்து நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். அவற்றுள் மறைசையந்தாதியுரை, யாப்பருங்கலக் காரிகையுரை, வள்ளியம்மை திருமணப்படலவுரை ஆகிய மூன்று உரைகளுமே அச்சிடப்பெற்றன.

புலவரவர்கள் சங்கநூல்களையும் பிற்றைச் சான்றோர் நூல்களையுமந் தெள்ளிதிற் பயின்றவர் என்பது அவரது கவிநூல்களால் நன்கு அறியக்கிடக்கின்றது. அவருடைய கவிகள் எல்லாம் இனிய ஓசையோடு சொல்வளமும், பொருள்வளமும், யாப்பணி இலக்கணவமைதியும் நன்கமையப்பெற்று கற்பவர் கேட்பவர்களுக்கு இன்பம் பயர்க்கக் கூடியனவாக மிளிர்கின்றன. அவர் இயற்றிய நூல்களுட் பெரும்பாலன சமய சம்பந்தமானவை. அவர் சுப்பிரமணிய்ப பெருமானில் ஈடுபாடுள்ளவர் என்பது அவருடய நூல்களால் அறியக் கிடக்கின்றது.

புலவரவர்களுடைய உரைநூல்கள் அவருடைய இலக்கண விலக்கிய அறிவையும், சைவசிந்தாந்த ஆராய்ச்சித் திறனையும் நன்கு புலப்படுத்துகின்றன.

பழைய நூலுரைகளைத் தேடிப்படிப்பாரும் தார தம்மியம் நோக்கி மதிப்பாரும் அருகிய இக்காலத்தில் புலவருடைய நூல்களுட் பல மறைந்து போனது ஆச்சரியமன்று.

## பரிசு பெறல்

ஈழநாட்டுப் புலவர்களுள்ளே, இந்தியா சென்று ஆங்குள்ள தமிழரசர்களதும், பிரபுக்களதும், சன்மானத்தையும் பரிசுகளையும், வரிசைகளையும் குறைவறப் பெற்றுப் பெருஞ் சிறப்படைந்தவர் சிவசம்புப் புலவர் ஒருவரே. அடையா நெடுங்கதவும் அஞ்சலென்ற சொல்லு முடைய பெருங்கொடை வள்ளலும், கவிவாணர் இதய கமலத்தை மலர்விக்கும் மாட்சி பெரிதுடைய இராமநாதபுர சமஸ்தான பூபதியுமாகிய பாஸ்கரசேதுபதி மகாராசாமீது கல்லாட சாரக் கலித்துறை, இரட்டைமணிமாலை, தனிச் செய்யுட்கள் ஆதிய இயற்றி உத்தரகோச மங்கை என்னுந் திவ்விய தலத்தில் அரங்கேற்றி அவர்தம் நன்மதிப்புக்கும், அன்புக்கும், ஆதரவிற்கும் உரியவராகிப் பல பரிசுகளையும், வரிசைகளையும் பெற்றார். மேலும் அவர் மதுரைத் தமிழ்ச் சங்கத் தாபகரும், அக்கிராசனாதிபதியும், பாலைவனத்தம் ஜமீந்தாரும், செந்தமிழ்ப் பரிபாலகருமாகிய பொ. பாண்டித்துரைத் தேவர்மீதும் நான் மணிமாலை ஒன்றைப் பாடி அவருடைய சன்மானத்தையும் பரிசுகளையும் பெற்றனர்.

## மணாக்கர்

புலவரிடத்து முறையே கற்றுப் பண்டிதரும் புலவருமாகிப் பேரும் புகழும் படைத்த மாணவரும் பலராவர். அவர்களுள் முக்கியமானவர்கள் வல்வை இயற்றமிழ்ப் போதகாசிரியர் ச. வயித்தியலிங்கபிள்ளை, புலோலி வ. குமாரசுவாமிப்புலவர், புலோலி ம. தில்லைநாத நாவலர், புலோலி வ. கணபதிப்பிள்ளை, அச்சுவேலி வேல்மயில்வாகனஞ் செட்டியார், பருத்தித்துறை ம. முத்துக்குமாரசுவாமிக் குருக்கள், சுன்னாகம் பூ. முருகேசபண்டிதர், ஆவரங்கால் க. நமச்சிவாயம்பிள்ளை, அல்வாய் ஆறுமுக நொத்தாரிசு ஆவர். மாணாக்கருள் வ. குமாரசுவாமிப் புலவரிடம் மிக்க அன்பு பூண்டவரென்றும், தாமியற்றும் நூல்களை அவரது பார்வைக்கு அனுப்பும் வழக்குடையவர் என்றுங் கூறுவர்.

சுன்னாகம் முருகேச பண்டிதர் பல பிரபந்தங்கள் பாடிப் பெருமையடைந்ததை உன்னிப் புலவர் பெருமகிழ்ச்சியடைந்தனர். இதனை 1886ம் ஆண்டுக்குச் சமமான பார்த்திப வருடம் ஆடிமாதம் 8ம் தேதி அவர் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவருக்கு எழுதிய கடிதத்தினால் அறியலாம்.

## கடிதம்

பார்த்திப, ஆடி அ.

சுப்பிரமண்யாய நம:

எனதன்புள்ள பௌத்திரராகிய ஸ்ரீமத் குமாரசுவாமிப்பிள்ளை அவர்களுக்கு,

"சுப்பிரமண்யசுவாமி திருவருளால் சர்வாபிஷ்ட சித்தியும் தீர்க்காயுளும் எய்துக.

யான் இற்றை வரையும் சுப்பிரமணிய சுவாமி திருவருளால் சுகமே இருக்கிறேன். நான் வேதாரணியம், எட்டிகுடி முதலிய இடங்களுக்குப் போய்வந்தபின், தங்களைக் கண்ணாரக் கண்டிலன். தம்பி முருகேசபிள்ளை பாடிய நீதிநூறு சேர்ந்தது. என் காரியம் முற்றும் தங்களுக்குத் தெரியும். எல்லாக் கல்வியும் சோதித்துப் பெருஞ்சபை முன் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலராற் பட்டம் பெற்றது; முருகேச பண்டிதர் முதலியோருக்கு ஆசிரியர் என்பது இத்தேசத்திலும், இந்தியாவிலும் தலங்களுக்கும், பிரபுக்களுக்கும் பாடிப் பல வரிசைபெற்றது முதலாகப் பலவுந் தாமறிந்ததே"

அ. சிவசம்புப்புலவர்

இக்கடிதம் குமாரசுவாமிப் புலவருக்கும், சிவசம்புப் புலவருக்கும் இடையிலிருந்த அன்பின் பிணிப்பை நன்கு விளக்குகின்றது. தமது மாணாக்கராகிய முருகேச பண்டிதரின் மாணாக்கர் குமாரசுவாமிப் புலவர் ஆகையால் அவரைப் பௌத்திரர் என்று விழித்தனர் என்க.

## இழந்த பார்வையைத் திரும்பப் பெற்றது

பாட்டுப் பாடுவதும், மாணவருக்குப் பாடஞ் சொல்லுவதுமே தொழிலாகக் கொண்ட புலவர், மாணாக்கர் கொடுக்கும் பணத்தையும், நூல்கள் இயற்றுவதால் வரும் வருவாயையும் பெற்றுத் தமது வாழ்க்கையை இன்புறநடாத்திவரும் காலத்தில் தமது கட்பார்வையை இழந்து பலவித துன்பங்களையும் அனுபவிப்பார் ஆயினர். இவ்வாறு எதிர்பாராத துன்பம் ஏற்பட்டதும் கந்தவனக்கடவைச் சுப்பிரமணியப் பெருமானே கதியென்று

மனவுறுதிகொண்டு ஆங்குச் சென்று அப்பெருமான் மீது ஒரு நான்மணிமாலையையும், சில கீர்த்தனங்களையும் இயற்றி அவர் கிருபையினாலே கட்பார்வையைத் திரும்பவும் பெற்றனர். இச்சம்பவத்தைக் குறித்துக் கந்தவனநாதர் கீர்த்தனையிற் பின்வருமாறு பாடியுள்ளார் :

'கண்ணொளியைத் தந்தாய் மறப்பேனோ
அந்தக் கண்ணொளியை வாங்காதே - வாங்கினாற்பழி
சகமட்டும் நீங்காதே'.

## போலிக் கவிஞன்

ஒரு நாள் புலவர் தமது மாணாக்கர்ளுக்குப் பாடஞ் சொல்லிக்கொண்டிருக்கும்போது அயலூர் வாசியாகிய பணவாஞ்சையுள்ள ஒரு போலிக்கவிஞன் வந்து, தாம் யாரோ ஒரு பிரபுவின்மீது பாடிய பாட்டைத் திருத்தித்தருமாறு வேண்டினன். புலவர் பாக்களைப் பார்த்ததும் அளவிலாக் கோபங் கொண்டனர். அவருடைய கோபம் பின்வரும் பாட்டாக உருவெடுத்தது.

வெண்பா

முன்னே ஒருகவிக்கு முந்நூறு நாநூறு
பொன்னே கொடுப்பர் புலவருக்கு - இந்நாளில்
வாசிக்க மாட்டாத வம்பரதி கப்பட்டுக்
காசுக்கை நூறு கவி

பாக்களைக் கொண்டுவந்த போலிக்கவிஞன் வெட்கமும், துக்கமும் மிக்குத் தலை குனிந்தவண்ணம் ஒன்றும் பேசாது வெளியேறினன்.

## தோற்றமும் குணமும்

சிவசம்புப் புலவர் ஆறடிக்கு மேற்பட்ட உயரமும் உரோமமடர்ந்த பொதுநிறமுடைய உடலமைப்பும் உடையவர். அரையில் வெள்ளை வேட்டிசால்வையும், தலையில் மிண்டுத் தலைப்பாகையும், தோளில் அங்கவஸ்திரமும் முறையாக அணிந்து, காதிற்குண்டலமும், நெற்றியில் சந்தனப் பொட்டும், விபூதிக் குறிகளும் விளங்க, நிமிர்ந்த நோக்குடனும், கெம்பீரமான நடையுடனும் சபைகளில் காட்சியளிக்கும்போது சபையோர் அவரை 'ஆனைக்குட்டிப் புலவர்' என்று வேடிக்கையாக அழைப்பது வழக்கம்.

புலவர் நல்லசுவையுள்ள உணவுவகைகளில்

பெருவிருப்புடையவர். நல்ல உணவு உண்பதற்காகப் பெருஞ்செலவு செய்யும் வழக்குவடையவர். புலவருடைய விருப்பத்திற்கியைய அவர் மனைவியாராகிய சிறீதேவியார் உணவுகளைப் பாகஞ்செய்துகொடுத்து அவரைத் திருப்தியடையச் செய்தனர். பாடஞ்சொல்லும்போது மாணவர்கள் கேள்வி கேட்டால் புலவர் கோபங்கொள்ளுவர் என்று கூறுவர். வருவாய்க்கு மேற்பட்ட செலவு செய்யும் வழக்குடைய புலவருக்கு எப்போதும் பணக்கஷ்டம் இருந்தது.

## முடிவு

இத்தனை சிறப்புகள் வாய்ந்த புலவரவர்கள் நோய்வாய்ப்பட்டு 1910 -ம் ஆண்டுக்குச் சமமான சாதாரண வருடம், புரட்டாதி மாதம் 13 ம் திகதி வியாழக்கிழமை நண்பகல் (29-09-10) இவ்வுலக வாழ்வைவிட்டு இறைவன் திருவடிநீழலை எய்தினர்.

புலவர் இறந்ததைக் குறித்து அவர் மாணாக்கராகிய அல்வாய் ஆறுமுக நொத்தாரிசு கூறிய பாக்கள் பின்வருவன :

காவிகாள மேகம் கவிச்சக் கரவர்த்தி கம்பனென்று
அவியா விளக்கனை யான்புக ழேந்தி யமைந்தொருங்கு
புவிமீது வந்த தெனுஞ்சிவ சம்புப் புலவனைக்கை
குவியாப் புலவ ரெவர்கவி பாடுங் குறிப்பறிந்தே.

செந்தமி ழாழி கரைகண்டு சைவத் திறம்பரவிக்
கந்த சுவாமி திருத்தொண்டு பூண்டு கவிமழையே
சிந்துநந் தேசிக னாருடுப் பிட்டிச் சிவசம்புவை
எந்தப் பிறப்பினிற் கண்ணாரக் காண்ப திசைமிகவே.

•

# நன்றிகள்

**எங்கள் குடும்பத்தலைவர் அமரர் அ.ஸ்ரீரங்கநாதன் அவர்களின் திடீர் மறைவுச் செய்தியைக் கேட்டு**

உடன்வந்து உதவியவர்களுக்கும்

தொலைபேசி வாயிலாகவும், நேரே வந்தும் ஆறுதல் கூறியோருக்கும்

மரணச் சடங்கிலிருந்து இறுதி ஊர்வலம்வரை கலந்துகொடோருக்கும்

அஞ்சலிப்பிரசுரங்களை வெளியிட்டோருக்கும்

ஆலய நிர்வாகங்கள், கல்வி நிலையங்கள், சமூக நிறுவனங்கள் ஆகியவற்றைச் சேர்ந்தோருக்கும்

அமரரின் அந்தியேட்டிக் கிரியைகளிலும் , சபிண்டீகரணநிகழ்விலும் கலந்துகொண்டோருக்கும்

இம் மலருக்குப் பலவகையிலும் உதவி புரிந்தோருக்கும்

திதி நிர்ணயவெண்பாவையும் உடுப்பிட்டிப் பெருமைபேசும் வெண்பாவையும் ஆக்கித்தந்த புலவர்மணி கா. நீலகண்டன் ஆசிரியர் (உடுப்பிட்டி) அவர்களுக்கும்

இம்மலரை அழகுற அச்சிட்டுத்தந்த அச்சகத்தாருக்கும்

மற்றும் பலவழிகளில் உதவிய அனைவருக்கும்

எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

நன்றி

**-குடும்பத்தினர்-**

# ஸ்ரீரங்கநாதம்

அமரர் அப்பாத்துரை ஸ்ரீரங்கநாதன் அவர்கள் இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி வாசர். சிறந்த சமூக, சமய சேவையாளர். அவரின் நினைவாக மலரும் இந்த மலர் மூன்று பகுதிகளை உடையது. முதற்பகுதி அமரர் பெருமையாகும். இதில் அமரர் 'ஸ்ரீ' இன் பெருமைகள் அவரை அறிந்தோரால் வரையப்பட்டுள்ளன. இரண்டாவது பகுதி திருக்குறள் - அங்கவியல். இது பாடசாலை மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளது. மூன்றாவது பகுதி உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவர் சரித்திரம். இது ஈழத்தமிழர்களுக்கும், உலகத்தமிழர்களுக்கும் பயனுள்ளது. இம்மலர் அனைவரும் பேணிப் பாதுகாக்க வேண்டிய அரிய பொக்கிசம்.

உத்தமர்கள் வாழுமூர் ஓயா வுழைப்புளவூர்
முத்தமிழு மோங்கு முதன்மையூர் – சத்தியூர்
வீறுதிறல் விஞ்ஞான மேதையரைத் தந்தவூர்
கூறுமுடுப் பிட்டியூர் கொள்.

– புலவர்மணி கா. நீலகண்டன் –

தோன்றி அழிவது வாழ்க்கை – அதில்
துன்பத்தோடு இன்பம் வெறுமை என்றோதும்
மூன்றில் எதுவரினேனும்
களிமூழ்கி நடத்தலே பரசிவமுத்தி

– மகாகவி பாரதியார் –